Registered as a News Paper in Sri Lanka.

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

දිනක්කතිර්

அனைத்து வகையான
அச்சுவேலைகளுக்கும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்:



ஈஸ்ரன் கிராபிக்ஸ்

திருமலை வீதி
மட்டக்களப்பு.

தொலைபேசி
065-24821

ஒளி - 01 - கதிர் - 213 | 13-11-2000 | திங்கட்கிழமை | பக்கங்கள் - 08 | விலை - ரூபா 5/-

# விடுதலைப் புலிகளுடன் பேசியே தீர்வு காண வேண்டியது அவசியம்

## தமிழ் கட்சிகளுடன் பேசுவதில் பயனில்லை

## ரணில் யோசனைக்கு தமிழ் கட்சித் தலைவர்கள் மறுப்பு

(கொழும்பு)

**இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தை நடத்துவதென்ற விஷயம் உடனடியாக நடைபெற வேண்டும். இது பற்றி ஏனைய தமிழ் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் விடுதலைப்புலிகளுடன் பேச வேண்டும் என்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறும் யோசனை அர்த்தமற்றது என்று தமிழீழ மக்கள் இயக்கம் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.**

நோர்வேயின் உதவியுடன் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமென்பதை வரவேற்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு முன்னர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட வடக்குக்கிழக்கு மாகாண தமிழ் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்திய பின்னரே புலிகளுடன் பேச வேண்டுமென்று தெரிவித்திருந்தார்.

ரெலோ செல்வம் கருத்து இது பற்றிக் கருத்துத் தெரிவித்த ரெலோ இயக்கத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இதை

(8ம் பக்கம் பார்க்க)

## துண்டுப் பிரசுரங்கள் ஏற்படுத்தும் குழப்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதி நிமலராஜனை சௌவுர் நிராயுதபாணி படுகொலை செய்யப்பட்டதை கண்டித்தும் அன்னாரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் இன்று கடைகளை அடைத்தும் போக்குவரத்துகளை நிறுத்தியும் அலுவலகங்களுக்குச் செல்லாமலும் துக்கம் அனுஷ்டிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட பொதுமக்கள் என்ற பெயரில் துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இதே சமயம் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயரில் நேற்று வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரமொன்றில் இது தங்கள் அதிகாரமும் உத்தரவுமல்லாமலும் சில காடையர்கள் கூட்டம் ஏற்பாடு

(8ம் பக்கம் பார்க்க)

## கொபி அனானுக்கு 15,000 பேர் பிந்துனுவெவ பற்றி மகஜர்

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைச் சம்பவம் பற்றி ஐ.நா. தலைமைச் செயலாளர் கொபி அனானுக்கு மூதூர் திருமலையிலிருந்து பதினையாயிரம் பேர் கையொப்பமிட்ட ஒரு மகஜர் நேற்று அனுப்பி வைக்கப்பட்டது.

புனர் வாழ்வு முகாம் படுகொலைகள் பற்றியும் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் நிலை பற்றியும் இன்றும் சிறைகளிலுள்ளவர்கள் பற்றியும்பாரபட்சமற்ற விசாரணை கேட்டும் இம் மகஜரில் குறிப்பிட்டிருப்பதாக தெரிகிறது.

இம் மகஜர் திருமலையிலுள்ள ஐ.நா.அகதிகள் உயர் ஸ்தானிகர் வெளிக்கள உத்தியோகத்தர் சுலக்ஸாந்தியா முரளியிடம் கையளிக்கப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட அவர் கொழும்பிலுள்ள ஐ.நா.அகதிகளுக்கான தூதுவர் மூலம் நியுயோர்க்கில் ஐ. நாடுகள் தலைமைச் செயலருக்கு அனுப்பி வைக்கப்படுமென்று தெரிவித்தார்.

## மாணவர்கள் மீது கும்பல் தாக்குதல்!

(சிலாபம்)

சிலாபம் பகுதியில் முச்சக்கர வண்டி ஒன்றில் வந்தவர்கள் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியதில் மாணவர் ஒருவர் காயமடைந்து சிலாபம் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

## ஒட்டு சுட்டானில் 60,000 கண்ணிவெடி அகற்றும் பணி!

(வவுனியா)

ஒட்டுச்சுட்டான் பகுதியில் மீளக் குடியமர வருவோர் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருள்கள் பற்றி மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென்றும் இத்தகைய வெடிபொருள்களைக் கண்டால் அல்லது அவைபற்றி அறிந்தால் உடன் ஒட்டுச்சுட்டானிலுள்ள வெண்புறா நிறுவனத்துக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளனர்.

முன்னர் படையினர் இருந்த இடங்களிலுள்ள முட்கம்பிகளை அகற்ற வேண்டாமென்றும் இவற்றை வைத்தே கண்ணிவெடிப்பொருள்கள் புதைக்கப்பட்ட இடங்கள் அடையாளம் கண்டு மீட்கப்பட வேண்டியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த எட்டாம் திகதி தொடக்கம் ஒட்டுசுட்டானில் நிலக்கண்ணி, மிதிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை இவ் வெடி பொருள்கள் எடுக்கும் பணிக்கு யுனிசெவ் நிதி உதவி வந்தது. இப்பொழுது அது உதவியை நிறுத்தி கொண்டு விட்டதால் தமிழர் புனர்வாழ்வுக் கழகமே இதற்கு நிதி உதவி அளித்து வருகிறது.

படைகள் முன்னர் நிலை கொண்டிருந்த இடங்களில் இதுவரை 60,000 மிதிவெடிகள் மற்றும் வெடிபொருள்கள் உள்நாட்டவர்களின் உதவியுடன் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு நிபுணர்கள், மோப்ப நாய்கள் உதவியுடன் 500 மிதிவெடிகள் மீட்பதற்கு 15,000 செலவிட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

## வீட்டில் குண்டு வெடித்து இளைஞர் பலி

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிகுடிப் பகுதியில் செட்டிப்பாளையத்தில் ஒரு வீட்டில் குண்டு வெடித்ததில் 22 வயது இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

விக்கி என்றழைக்கப்படும் பத்மநாதன் திவாகரன் என்ற இந்த இளைஞர் முன்பு ராசிக் குழுவிலும் பின்னர் ஈ.பி.டி.பியிலும் அங்கம் வகித்து வெளியேறியவராம். இவர் வீரமுனையைச் சேர்ந்தவர். கையில் குண்டு வைத்திருந்தபோது மதுபோதையில் தவறி விழுந்து குண்டு வெடித்ததிருக்கலாமென்று கூறப்படுகிறது.

## படையினர் கைது செய்த 15 தொழிலாளர் விடுதலை

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு செங்கலடி பதுளை வீதியில் கோபாவெளி காட்டுக்கு விறகு சேகரிப்பதற்கென சனிக்கிழமை காலை புல்லுமலை மற்றும் உறுகாமம் ஆகிய கிராமங்களில் இருந்து சென்ற கூலித் தொழிலாளர்கள் மகோயா விசேட அதிரடிப்படையினாரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களது விடுதலை குறித்து மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாகிர் மௌலானா மகோயா அதிரடிப்படை பொறுப்பதிகாரி எஸ். இ. ஜெயவீரவுடன் தொடர்பு கொண்டு பேசினார்.

இதேவேளை ஏறாவூர் 5ம் குறிச்சி தமிழ் கிராமத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடத்திய சுற்றிவளைப்பு தேடுதலின் போது கைது செய்யப்பட்டு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில்

(8ம் பக்கம் பார்க்க)

## இன்று மட்டுநகர் வரும் அவுஸ்ரேலிய தூதுவர்

(ஏறாவூர் நிருபர்)

அவுஸ்ரேலிய நாட்டின் இலங்கைக்கான தூதுவர் செல்வி கதிகலத்மென் இன்று திங்கட்கிழமை மட்டக்களப்பிற்கு விஜயம் செய்கிறார். திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் மட்டக்களப்பில் தங்கியிருக்கும் இவர் பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாகிர் மௌலானாவை அவரது ஏறாவூர் இல்லத்தில் சந்திப்பதோடு தேசிய மனித உரிமைகள் ஆணையம், சமாதான சபை மற்றும் வர்த்தக சங்கம் போன்ற பொதுநல அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார். அதனை அடுத்து அவுஸ்ரேலிய தூதுவர் அம்பாறை மாவட்டத்திற்கு செல்வார்.

கிழக்கு மாகாண மக்களின் தற்போதைய வாழ் நிலை மற்றும் மனித உரிமைகள் குறித்தும் நேரடியாக அறிய முற்படுவார் என தெரியவருகிறது.

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055


## தமிழ் கைதிகளின் பாதுகாப்பு

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களில் முப்பதுக்கு மேற்பட்டோர் கொத்தியும் வெட்டியும் தீவைத்தும் மிகக் கோரமான முறையில் கொலை செய்யப்பட்ட சம்பவம் மக்கள் மனதில் இன்னமும் வடுவாக உறைந்து போயுள்ளது.

இப்படுகொலைகளைக் கண்டித்து அறிக்கை விடாத தமிழ் அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் இல்லையென்றே சொல்லலாம்.

பண்டாரவளைப் படுகொலைகளுக்கு கண்டனம் தெரிவித்து கடையடைப்புக்களும் நடந்தன.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வெலிக்கடைச்சிறைச் சாலையில் சந்தேகத்தின் பேரில் அடைத்து வைக்கப்பட்டிருந்த கைதிக ளுடன் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த குட்டி மணி , ஜெகன், தங்கத்துரை போன்ற விடுதலைப் போராளி கைதிகளும் இருந்தனர்.

சிறைக்குள்ளிருந்த கடும் குற்றவாளிகளான சிங்களக் கைதிகளும் சிறைக்காவலர்களும் சேர்ந்து தொடர்ந்து இரு தினங்கள் தமிழ்க் கைதிகளை தாக்கி கோரமாகக் கொலை செய்தனர்.

இரு தினங்களிலும் ஐம்பத்திரெண்டு தமிழ்க்கைதிகள் மிகவும் பாதுகாப்பான சிறைச்சாலைக்குள் கோரமாகக் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை உரிய முறையில் நடைபெறவில்லை. இதில் சம்பந்தப் பட்ட குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படவுமில்லை.

இக் கோரக் கொலைகள் பற்றிக் கண்டனமும் கவலையும், வழமைபோல தமிழ் அரசியல் கட்சகளும் இயக்கங்களும் தெரிவித்து அறிக்கை விடுத்தன.

அப்போதே இச்சம்பவங்கள் பற்றி தகுந்த விசாரணை நடத்தி கொலைகாரர்களும் கொலைகளுக்குக் காரணமாக இருந்தவர் களும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டு இருந்தால் மீண்டும் சிறைச்சாலை களில் தமிழ்க்கைதிகள் மீதான தாக்குதல்களும் கொலைகளும் நடைபெற்றிருக்கமாட்டா.

இப்பொழுது பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமிலும் தமிழ் இளைஞர் கள் படுமோசமாகப் படுகொலை செய்யப்பட்டிருக்க மாட்டார்கள்.

பிந்துனுவெவ படுகொலைகளுக்குப் பின்னராவது தடுப்பு முகாமிலும் சிறைகளிலும் வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கும் போதிய பாதுகாப்பு அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டதாகத் தெரியவில்லை.

ஆனால் பிரதம மந்திரியும் மற்றும் அமைச்சர்களும் அரசியல்வாதிகளும் விடுதலைப்புலிகளை அழித்து ஒழிப்போம் என்று பேசுவதில் குறைவில்லை.

இத்தகைய பேச்சுக்கள் தான் பிந்துனுவெவப் புனர்வாழ்வு முகாமில் இளைஞர்கள் கோரமாகக் கொலை செய்யப்படுவதற்கும் காரணமாக இருந்தது.

இந்த நிலையில் களுத்துறைச் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் எழுதியுள்ள உருக்கமான கடிதம் அரசாங்கத்தினது அல்லது அரசாங்க அதிகாரிகளது கவனத்தை ஈர்க்குமோ இல்லையோ பிந்துனுவெவப் படுகொலைகளுக்கு கண்டனம் தெரிவித்த அரசின் தமிழ் அமைச்சர் பாராளுமன்றப் பிரதிநிகள் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் கண்களைத் திறந்து உரிய நடவடிக்கைகளை அவசரமாக மேற்கொள்வதற்குத் தூண்ட வேண்டும்.

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலையின் பின்னர் களுத்துறைச்சிறைச்சாலையிலும் அவ்வாறானதொரு பயங்கரம் நடைபெறலாம் என தாம் அஞ்சுவதாகவும் களுத்துறைச் சிறைச்சாலையில் தமது உயிருக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இருப்பதாக தாம் நம்ப வில்லை என்றும் இங்குள்ள தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

தங்களை உடனடியாக தமிழ் பிரதேசங்களிலுள்ள சிறைச் சாலைகளுக்கு இடமாற்றுமாறு உருக்கமான வேண்டுகோள் விடுத் துள்ளனர்.

தமிழ்ப் பிரதேசங்களுக்கு அனுப்புவது சாத்தியமில்லாதவிடத்து சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களால் கண்காணிக்கக்கூடியவாறு கொழும்பு நகர மையப் பகுதிக்கு மாற்றுவதன் மூலம் தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை ஓரளவுக்கு உறுதிப்படுத்த முடியுமென்றும் இந்தக் கைதிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள மனோநிலையில் சிங்களக் கைதிகளுடன் தமிழ்க் கைதிகளைச் சிறையில் ஒன்றாக வைத்திருப்பது விபரீதமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

இந்த நிலையிலும் சிறைச்சாலையில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தலாமென்று கனவு காணக்கூடாது.

அரசும் அரச அதிகாரிகளும் தமிழர்களின் நிலையை உணர முடியாது. தமிழ் அமைச்சர்களும் எம்.பிக்களும் கூட இதை உணர்வது கஷ்டம்தான்.

என்றாலும் இப்போதுதான் பிந்துனுவெவ படுகொலைகளுக்கு ஹர்த்தாலும் கடையடைப்பும் கண்டனமும் கவலையும் தெரிவித்திருப்பதால் இந்த நிலைமையை புரிந்து கொள்ள முடியும்.

மீண்டும் தமிழ்க் கைதிகளுக்காக கவலையும் கண்டனமும் தெரிவிப்பதற்கும் கடையடைப்புச் செய்வதற்கு கோரிக்கை விடாமலும் களுத்துறையிலும் மற்றும் சிறைச்சாலைகளிலும் விசாரணைகள் இல்லாமலும் தண்டனை விதிக்கப்பட்டும் உள்ள தமிழ்ச் சிறைக் கைதிகளைப் பாதுகாப்பதற்கு உடன் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது தமிழ் அமைச்சர்கள் பாராளுமன்றப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களின் பொறுப்பும் கடமையுமாகும்!

# உணர்வலைகளுக்குத் தலைமை தாங்க எவரும் முன்வரவில்லை

அண்மைக்காலமாக இலங்கையில் அடுத்தடுத்தாக பல படுகொலைகள் அரங்கேறியுள்ளன. வழமையாகவே படுகொலைகள் நிகழும் தேசமே நம் தேசம். ஆயினும் அண்மையில் இடம் பெற்ற ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைகள் என்பன மக்கள் மனதில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தின. இந்த எழுச்சிக்கு தலைமை தாங்கி வழிநடத்தப் பயந்து ஒருங்கியிருந்த கட்சி ஒன்று மக்களால் குறிப்பிட்ட ஓர் நாளில் ஹர்த்தால் போராட்டம் வெற்றி பெற்ற போது அதைத் தாமே நடத்தியதாக உரிமை கோர முனைந்த வெட்கம் கெட்ட செயலே இங்கு நடந்தேறியது.

மக்களைத் தொடர்ச்சியான படுகொலைகள், கைதுகள், சித்திரவதைகள் மூலம் அச்சுறுத்தி "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்ற நிலையில் அடிமைகளாக வைத்திருக்க முனைவதே அரசின் ஒடுக்குமுறைத் திட்டம்.

இதனால் பரவலான மக்கள் எழுச்சியை இராணுவ ரீதியில் ஒடுக்கும் தனது வழமையான உத்தியை அரசு கையாளத் தொடங்கியுள்ளது.

இதன் ஒரு பகுதியாகவே பரவலான மக்கள் எதிர்ப்புத் தோன்றிய வந்தாறுமூலை, மாவடி வேம்பு, சந்திவெளி, பிரதேச மக்கள் மீது இராணுவம் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. சுமார் 60,70 பேர் இவ்வாறு மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் பரவலாக நடத்தப்பட்ட இந்த எழுச்சிப் போராட்டங்களை ஆங்காங்கே வழிநடாத்தியவர்களை இனம் காணும் முயற்சியிலும் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

அண்மையில் இராணுவத் தரப்புக்கு எதிராகப் பேசிய மட்டு மாவட்டத்தில் அதிகப்படி மக்கள் விருப்பு வாக்குகளைப் பெற்ற நிமலன் சௌந்தரநாயகம் கோழைத்தனமாக படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இப்போ மட்டக்களப்பு நகரின் முக்கிய பகுதிகளில் பாதுகாப்புப் பொறுப்பு அதிரடிப்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவை எல்லாமே மக்களை, அவர்களது குரலை, எழுச்சியை ஒடுக்கத் திட்டமிட்டுச் செய்யப்பட்டு வரும் நடவடிக்கைகளே. இனிவரப் போகும் பெரும் அபாயங்களுக்கான முன் அறிவிப்புக்களே இவை.

அவையாவும் வாக்குகளை இலக்கு வைத்துப் பேசப்பட்ட வெறும் போலி வார்த்தைகளே என்பது இவ்வளவு விரைவில் உறுதியாகிவிட்டது.

வழமை போலவே எமது தலைவர்கள் கண்டன அறிக்கைகளை அள்ளி வீசினர். சந்திரசேகரன் கைது செய்யப்பட்ட போது உடனடியாக அவரை விடுதலை செய்யாவிட்டால் வடக்குக் கிழக்கு மக்கள் கிளர்ந்து எழுவது தவிர்க்க முடியாது என்று சூள் உரைத்தனர்.

அவர் குறிப்பிட்டது போலவே மக்கள் கொதித்து எழவே செய்தனர். ஆனால் அந்தத் தலைவரோ அறிக்கையுடன் மௌனமாகி விட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே அங்கும் இங்குமாக மக்கள் பல்வேறு எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர். உண்மையில் பரந்தளவில் ஓர் மக்கள் எழுச்சி தோன்றியது.

ஆனால் அவை அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிய தனித்தனிப் போராட்டங்களாக இருந்தமையினால் அதிகளவான ஈர்ப்பைப் பெறாமலே போய் விட்டது.

இனிமேல் ஒரு நாடு, சகோதர மக்கள் என நம்பி வாழவே முடியாது என்பதைத் தெட்டத்தெளிவாக உணர்த்திவிட்ட பிந்துனுவெவ படுகொலைகளைத் தொடர்ந்து எழுந்த இந்த மக்கள் எழுச்சிகள் சரியான ஓர் அரசியல் விழிப்புணர்வுடனே இருக்கின்றனர் என்பதை தெளிவாகக் காட்டுகின்றன.

அதனால் தமது பதவி சுகங்களுக்காக அரசியல் நடத்தும் எமது தலைவர்கள் பலரும் இந்த எழுச்சிக்கு தலைமை ஏற்று, வழி நடத்த தவறி விட்டனர். மக்கள் மத்தியிலிருந்து எழுந்த இந்தப் பரவலான எழுச்சிக்கு தலைமை ஏற்று அதனை ஒரு சரியான திசையில் வழிநடத்த வேண்டிய முக்கியம் பெற்றும் இவர்களையே சார்ந்துள்ளது. ஆனால் இப்போராட்டத்தை இவர்கள் திசை திருப்பிட முனைந்தனர். இத்திட்டத்தின் படி அரச அடிவருடிகளால் தூண்டப்பட்ட அவர்களது தொண்டர்கள் சிலர் அமைதிப் போராட்டத்தில் தலையிட்டு ஆர்ப்பாட்டம், கலாட்டா, கல்லெறி வீச்சில் ஈடுபட்டு போராட்டத்தை திசை திருப்பி விட்டனர்.

திட்டமிட்டபடி இதற்காகவே காத்திருந்த பொலிஸார் உடனடியாகப் புகுந்து மக்களது போராட்டத்தை அடக்கியதுடன் மக்களின் உணர்வுகளுக்கு உரிய தலைமை வழங்கிய மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனையும் பிடித்து 4ம் மாடியில் அடைத்து வைத்திருந்தனர்.

தொடர்ந்தும் மலையகத் தோட்டங்களுக்குள் புகுந்து காடைத்தனம் புரிந்த படையினர், மக்கள் எழுச்சியை இராணுவ ரீதியில் மிரட்டி அடக்குவதிலும் ஈடுபட்டனர்.

**(ருத்ரா)**

எவ்வாறெனினும் இந்த மக்கள் எழுச்சிக்கு தலைமை ஏற்றதன் மூலம் மக்களின் உணர்வுகளை உலகறியச் செய்ததிலும் மக்கள் மத்தியில் போராட்ட உணர்வை வளர்த்து விட்டதிலும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் வெற்றி கண்டுள்ளார் என்று சொல்ல வேண்டும்.

ஆனால் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் மக்கள் மத்தியில் எழுந்த உணர்வலைகளுக்கு தலைமை தாங்க எமது தமிழ் தலைவர்கள் யாரும் முன் வரவில்லை. இத்தனைக்கும் இவர்கள் பாராளுமன்ற தேர்தல் பிரச்சாரங்களின் போது அரசாங்கத்தின் அடாவடித்தனங்களையும் அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் எதிர்த்து நிற்பதாக கூறியே பாராளுமன்றம் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# படைக் குறைப்பை எதிர்க்கும் அம்பாறை மாவட்ட மக்கள்

(அரியம்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள விசேட அதிரடிப்படை வீரர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதற்கு அப்பிரதேச வாசிகளிடமிருந்து எதிர்ப்பு கிளம்பியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அம்பாறை-மட்டக்களப்பு மாவட்ட எல்லைப்புற கிராமங்களில் விசேட அதிரடிப்படை முகாம்கள் உள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு, காத்தான்குடி, மட்டக்களப்பு நகர பிரதேசங்களுக்கும் நேற்று முதல் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகத் தேவைப்படும் படை வீரர்களுக்காக அம்பாறை மாவட்ட முகாம்களிலுள்ள படை வீரர்களில் ஒரு தொகுதியினர் அனுப்பி வைக்கப்பட இருந்தனர்.

இவ்விடயம் குறித்து திகாமடுல்ல மாவட்ட தேசிய ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க விசேட அதிரடிப்படைக் கட்டளைத் தளபதி பிரதி பொலிஸ் மா அதிபர் நிமல் குணத்திலகவைச் சந்தித்து ஆட்சேபனை தெரிவித்தார்.

இதனையடுத்து அம்பாறை மாவட்ட படை முகாம்களிலுள்ள படைவீரர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கான நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளன.

# 'பென்ரோச் பற்றரிகள்' தொகையாக வாங்கினாராம்

(ஏறாவூர் நிருபர்)

ஓட்டமாவடியிலுள்ள பல சரக்குக் கடையொன்றிலிருந்து ஒரு தொகை (பென் ரோச்) சிறிய ரக பெற்றரிகளை ஆயுததாரிகள் அபகரித்துச் சென்றுள்ளதாக வாழைச் சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மிதிவெடிகளுக்குப் பயன்படுத்துவதற்காக பெற்றரிகளை புலிகள் எடுத்துச் சென்றிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை வாழைச் சேனையிலுள்ள வியாபாரி ஒருவருக்குச் சொந்தமான எண்பத்தையாயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளொன்றும் சிலரால் அபகரிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

# இம்முறை ராஜ்குமாரை நிட்சயம் மீட்டு வருவேன்

ஆறாவது முறையாக காட்டிற்குள் செல்லும் பழ.நெடுமாறன் இம்முறை கண்டிப்பாக ராஜ்குமாரை மீட்டு வருவதாக கூறினார். மேலும் இரு மாநில அரசு தூதராகவும் தான் செல்லவில்லை என்றும் குறிப்பிட்டார்.

கன்னட நடிகர் ராஜ்குமார் சந்தனவீரப்பனால் கடத்தப்பட்டு 100 நாட்களுக்கும் மேல் ஆகிறது. 4 முறை அரசு தூதராக நக்கீரன் ஆசிரியர் கோபால் காட்டிற்குள் சென்று வீரப்பனுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். 5-வது முறையாக நக்கீரன் கோபாலுடன் தமிழர் தேசிய இயக்க தலைவர் பழ. நெடுமாறன், பேராசிரியர் கல்யாணி, சுகுமாறன் ஆகிய 4 பேரும் காட்டுக்குள் சென்று வீரப்பனுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால் இது பலன் அளிக்கவில்லை. வீரப்பன் கோரிய தடா கைதிகளை விடுவிக்க சுப்ரீம் கோர்ட் டும் மறுத்துவிட்டது.

இந்நிலையில் நெடுமாறன் காட்டிற்குள் செல்வதுபற்றி சட்டசபையில் எதிர்கட்சி தலைவர் சோ.பாலகிருஷ்ணன் விமர்சனம் செய்தார். இதனையடுத்துதான் மீண்டும் காட்டுக்குள் செல்லமாட்டேன் என்று நெடுமாறன் கூறி னார். இதனைத் தொடர்ந்து காட்டுக்குள் செல்லும்படி பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ், ராஜ்குமாரின் மகன்கள் உள்பட பலர் நெடுமாறனை வற்புறுத்தினார்கள். இதனைத் தொடர்ந்து 6-வது முறையாக (நேற்று இரவு) மீண்டும் காட்டுக்குள் செல்வதாக நேற்று நிருபர்களிடம் கூறினார்.

நேற்று மாலை பழ. நெடுமாறன் நிருபர்களிடம் கூறியதாவது:

இந்த தடவை 6-வது முறையாக, காட்டுக்குள் நான், பேராசிரியர் கல்யாணி, சுகுமாறன், நக் கீரன் கோபால் ஆகிய நான்கு பேரும் செல்கிறோம். வீரப்பனிடமிருந்து எந்த சிக்னலும் கிடைக்கவில்லை. வரவேண்டிய அவசியமும் இல்லை.

சுப்ரீம் கோர்ட்டு அளித்த தீர்ப்பை நானும் மதிக்கிறேன். இந்த தீர்ப்பினால் ராஜ்குமாரை மீட்ப தில் எந்த தடையும் வராது. இந்த முறை ராஜ்குமாரை மீட்பது என்பதில் உறுதியாக இருக்கிறோம். சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்கு பின்னால் மனித உரிமை கமிஷன் தலையிட்டு கர்நாடக சிறையிலுள்ள சிறை கைதி கள் 151 பேரையும் மீட்டு வரவேண்டும் என்று சொன்னோம். ஆனால் மனித உரிமை கமிஷன் எந்த முயற்சி எடுக்கவில்லை. இனி மேலாவது தலையிட்டு விசாரணையின்றி வாடும் கைதிகளை விடுவிக்க முன்வர வேண்டும்.

நான் இரு மாநிலத்தின் சார்பில் அரசு தூதராக செல்லவில்லை. எந்த கடிதத்தையும் நான் எடுத்துச் செல்லவில்லை.

எதிர்கட்சி தலைவர் சோ.பா. பொறுப்பற்ற முறையில் பேசியது எனக்கு மன வருத்தத்தை தருகிறது. ஆனால் நான் விமர்சனம் கண்டு பயப்படவில்லை. மேலும் மூப்பனார் இது பற்றி என்னிடம் எதுவும் பேசவில்லை.

இரு மாநிலத்தின் சார்பில் செல்லாமல் மனிதநேய அடிப்படையில்தான் செல்கிறேன். அதே வேளையில் 2 மாநில மக்களின் அன்பை சுமந்து செல்கிறேன். பணம் எதுவும் எடுத்துச் செல்வதாக கூறுவது தவறாகும்.

நான் கடந்த முறை காட்டுக்குள் சென்றபோது எந்த கொடியும் பறக்கவில்லை. இந்த முறை காட்டுக்குள் சென்றபின் வீரப்பனிடம் விளக்க வேண்டிய முறையில் விளக்கி சொல்லி கண்டிப்பாக மீட்டு வருவோம். இவ்வாறு அவர் கூறினார்.

பின்னர் ராஜ்குமாரின் மகன்கள் ராகவேந்திராகுமார், சிவராஜ்குமார் நிருபர்களிடம் கூறியதாவது:

இம்முறை தூதுக்குழு செல்வது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. வீரப்பனுக்கு எங்கள் குடும்பம் பணம் எதுவும் கொடுத்ததாக கூறுவது தவறாகும். அப்படி எதுவும் கொடுக்கவில்லை. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

இன்று (நேற்று) இரவு 9 மணிக்குமேல் காட்டுக்குள் செல்லப்போவதாக பழ.நெடுமாறன் கூறினார்.

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

# துண்டிக்கப்பட்ட கை இணைத்து மருத்துவ உலகில் சாதனை

வாலிபரின் துண்டிக்கப்பட்ட கையை மீண்டும் இணைத்து மதுரை அப்பல்லோ டாக்டர்கள் சாதனை படைத்துள்ளனர்.

மதுரை அப்பல்லோ மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர் சந்திரபிரகாசம் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:-

மதுரையைச் சேர்ந்த வாலிபர் முருகவேல் (வயது 29) என்பவரை கடந்த 3-ம் தேதி காலை 9 மணியளவில் அவரது துண்டிக்கப்பட்ட இடது கையோடு மதுரை நகர் போலீஸ் துணை கமிஷனர் அமல்ராஜ் மதுரை அப்பல்லோ மருத்துவமனைக்கு கொண்டுவந்தார். அந்த வாலிபரின் இடதுகை முழங்கைக்கு துண்டிக்கப்பட்ட ரத்தம் சொட்ட சொட்ட மேலே சேறும், சகதியுடன் கொண்டுவரப்பட்டது. உடனே வாலிபர் முருகவேலுக்கு முதலுதவி அளிக்கப்பட்டது. துண்டிக்கப்பட்ட கைமுறையாக பாதுகாக்கப்பட்டது.

முருகவேல் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் ஒருவரின் வருமானத்தை நம்பித்தான் அவரது குடும்பம் உள்ளது. எனவே அவரது கையை காப்பாற்றுவது அவரின் உயிரைக்காப்பாற்றுவதற்கு இணையாகும் என கூறினார்கள். சபாநாயகர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் பாதிக்கப்பட்ட முருகவேலுக்கு நிதி உதவி செய்யமுன்வந்தார். போலீஸ் துணை கமிஷனர் அமல்ராஜ் பல்வேறு சமூக நலஅமைப்புகளுடன் சேர்ந்து உதவுவதாக உறுதியளித்தார்.

உடனடியாக முருகவேலை ஆபரேஷன் தியேட்டருக்கு கொண்டுசென்று சுமார் 15 மணிநேரம் ஆபரேசன் செய்தோம். அவருக்கு ஏ.1 பாஸிடிவ் ரத்தம் 8 பாட்டில் கொடுக்கப்பட்டது. பின்னர் ஆபரேஷன் வெற்றிகரமாக நடந்து முருகவேலுக்கு மீண்டும் கை பொருத்தப்பட்டது.

# அமைதி காக்கும்படி அதிபர் கிளின்டன் வேண்டுகோள்

யார் அதிபர் என்பதை புளோரிடா மாநிலம் நிர்ணயிக்கும் அதனால் அமெரிக்க மக்கள் மிகவும் பொறுமையாக இருக்க வேண்டும் என்று பதவி விலகப் போகும் அதிபர் பில்கிளின்டன் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமெரிக்காவில் 1963ம் ஆண்டு அதிபர் தேர்தல் நடந்த சம்பவம் மாதிரி தற்போது நடந்த தேர்தலிலும் நடந்துள்ளது. ஆனால் அப்போது யார் அதிபர் என்பதை அறிவிப்பதில் எந்தவித சிக்கலும் இல்லை.

இந்தத்தடவை ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அல்கோர் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா அல்லது குடியரசு கட்சி வேட்பாளர் ஜார்ஜ் வில்லியம் புஷ் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா என்பதை அறிவிக்க இன்னும் ஒரு வாரகாலமாகும் என்று தெரிகிறது. இதனால் அல்கோர் ஆதரவாளர்களுக்கும் ஜார்ஜ் வில்லியம் புஷ் ஆதரவாளர்களுக்கிடையே மோதல் உருவாகும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

இந்த நிலையில் அமெரிக்காவின் அடுத்த அதிபர் அல்கொரா அல்லது வில்லியம் புஷ்ஷா என்பதை புளோரிடா மாநிலம் நிர்ணயிக்கும். அதனால் நம் மக்கள் மிகவும் பொறுமையாக இருக்க வேண்டும் என்று வானொலியில் உரையாற்றுகையில் அதிபர் கிளின்டன் கேட்டுக் கொண்டுள்ளார்.



துண்டிக்கப்பட்ட கையையும் மதுரையைச் சேர்ந்த வாலிபர் முருகவேல் சிகிச்சை பெறுவதையும் படத்தில் காணலாம்

# கட்டிடம் இடிந்து விழுந்து 3பேர் பலி

(லெபனான்)

லெபனான் பெய்ரட் பகுதியில் இரண்டு மாடிக் கட்டிடம் சனிக்கிழமை அதிகாலை இடிந்து விழுந்ததில் 3 பேர் சம்பவ இடத்திலேயே இறந்தனர். 20 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

மீட்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று இறந்தவர்களின் சடலங்களை வெளியே எடுத்தனர். காயமடைந்த அனைவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த இரண்டு மாடிக் கட்டிடம் கட்டப்பட்டு 5 வருடங்கள்தான் ஆகின்றது. இறந்தவர்களின் எண்ணிக்கை உயரலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.

அதிகாலை 3.50 மணிக்கு கட்டிடம் இடிந்து விழுந்தபோது. அப்பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த மாநகராட்சி ஊழியர்கள், இது சாதாரண விபத்தாக இருக்கக் கூடும் என்று அப்பகுதிக்குச் செல்லாமல் இருந்து விட்டனர்.

இந்தக் கட்டிடத்திலிருந்து சில கிலோமீட்டர் தொலைவிலுள்ள கட்டிடம் ஒன்றில் வசிக்கும் முகமது இட்டானி என்பவர் இது குறித்துக் கூறுகையில், நாங்கள் பிறந்தநாள் விழா கொண்டாடிக் கொண்டிருந்தோம்.

அப்போது இரண்டு மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்த சத்தம் கேட்டது. உடனடியாக அங்கு விரைந்தோம். அதற்குள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டவர்கள் கூக்குரலிட்டு அழும் சத்தம் கேட்டது என்றார். இச்சம்பவம் குறித்து பெய்ரட் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

# ரயிலில் தீ விபத்து 170 பயணிகள் கருகிச் சாவு

பயணிகளை ஏற்றிக் கொண்ட ரயிலில் திடீரென்று தீப்பற்றி எரிந்ததில் 170 பேர் கருகிச் செத்தனர்.

இந்த கோர விபத்து ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஆஸ்திரியாவில் நடந்துள்ளது சுவிட்சர்லாந்து நாட்டுக்கு அடுத்தபடியாக சிறந்த சுற்றுலா தலங்களும் இயற்கை அழகு, மிகுந்த குன்றுகளும், பனிப்பிரதேசங்களும் அடங்கியதுதான் ஆஸ்திரியா.

இந்த நாட்டில் உள்ள ஒரு பனிப்பிரதேச சுற்றுலாத்தளத்திற்கு 180 பனிச்சறுக்கு விளையாட்டு வீரர்கள் ஒரு ரயிலில் மொத்தமாகச் சென்றனர். ரயில் சென்று கொண்டிருந்த போது திடீரென்று தீப்பிடித்து எரிந்தது. இதில் 170 பேர் கருகச செத்துவிட்டனர் என்று சால்ஜ்பர்க் மாநில கவர்னர் பிரான்ஸ் ஸ்காவ்ஸ்பொர்ஜர் நிருபர்களுக்கு பேட்டி அறிக்கையில் கூறினார்.

ரயிலில் சென்றவர்களில் 10 பேர்களை மட்டுமே காப்பாற்ற முடிந்தது என்றும் அவர் மேலும் கூறினார்.

# மட்டக்களப்பு பொலனறுவை குடி நீர்த்தட்டுப்பாடு நீங்க உலக வங்கி நிதி உதவி வழங்கும்

(கொழும்பு)

மட்டக்களப்பு பொலனறுவை மாவட்டங்களில் ஏற்படும் குடி நீர் பற்றாக்குறையை போக்க ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவிவழங்க இணங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை நாட்டின் குடிநீர்ப்பிரச்சினையை தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த நீர் வடிகால் அமைப்பின் தலைவர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் அடுத்த வாரம் மணிலாவுக்கு விஜயம் ஒன்று மேற்கொள்ளவுள்ளார்.

மேலும் நாட்டின் குடிநீர்ப்பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளதாகவும் இதன் முதல் கட்டமாக 6 ஆயிரம் மில்லியன் ரூபாயை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற் கொண்டிருக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உபதலைவருடன் நடந்த பேச்சுவார்த்தையை அடுத்தே இந்த இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உபதலைவருடனான தூதுக்குழு வெள்ளிக்கிழமை ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியது.

அன்றுமாலை இக்குழுவை நீர் வடிகால் அமைச்சு சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியது.

வழங்கப்படும் முதல் கட்ட நிதி உதவியில் மட்டக்களப்பு,மாத்தறை, அம்பாந்தோட்டைப் பகுதிகளுக்கு நீர் வழங்கப்படவுள்ளது..

அதேவேளை பயிர்ச்செய்கைக்கு அரசாங்க நீர் பாசன அமைச்சினால் வழங்கப்படும் நீருக்கு கட்டணம் அறவிடப்படுமா என்று வினவப்பட்ட போது அப்படி எதுவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது என்று நீர் வடிகால் அமைச்சின் தலைவர் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

# பிறந்த திகதி தரும்யோகம்.

## ஜோதிடம் - ஆகஸ்ட் - 02

ஆகஸ்ட் மாதம் 2,11,20,29ம் தேதியில் பிறந்தவரின் பலன்கள்:- எண் 2 அதன் அதிபதி **சந்திரன்.**

ஆகஸ்ட் 2,11இல் பிறந்தவர்கள் சந்திரன் ஆதிக்கமும், 20,29இல் பிறந்தவர்கள் சூரியன் ஆதிக்கமும் பெற்றவர்கள்.

அறிவாற்றல் அதிகமே பெற்றிருப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். எத்தொழிலில் ஈடுபட்டாலும் அத்தொழிலில் முன்னேற்றமும் புகழும் பெறுவீர்கள்.

காதல் வாழ்க்கையில் முழுவெற்றியும் பெறுபவர்கள். உங்களது கவர்ச்சியான நடவடிக்கையால் பலரையும் தன்பக்கம் இழுத்துச் செல்லும் ஆற்றல் பெற்றவர்கள்.

கலையுலகில் பிரகாசிக்கும் தாரகையாக நடிகராக புகழ் பெறுவீர்கள். இசையில் குரல் இனிமை, உடலில் கவர்ச்சி, பேசும்கண்கள் இவைகளையுடைய கலை ஆர்வமிக்கவர்கள். இளமைக் காலத்தில் பல தடைக்கற்களையும் கடந்து தியாகங்கள் பல செய்தே வசதியான வாழ்க்கையைப் பெறுவீர்கள்.இவ்வுலக வாழ்க்கையிலே வசதிகள் அனைத்தையும் அனுபவிக்கும் அதிர்ஷ்டசாலிகளே மக்களின்மனத்திலே உங்களுக்கெனஒருஇடத்தையும் பெற்றிருப்பீர்கள். சிறந்த நிர்வாகத் திறமை பெற்றவர்கள்.

பெருந்தன்மை அதிகம் உடையவர்கள். இன்றும் விட்டுக் கொடுத்தால் நாளை பெற முடியும் என்று நினைப்பவர்கள். எதற்கும் அஞ்சா நெஞ்சமுடையவர்கள். மற்றவர்களின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் மதிப்புத் தராத எண்ணமுடையவர்கள். சிறந்த எழுத்தாற்றல் உடையவர்கள். விரிவுரையாளர்கள். சிறந்த போதகர். பணமும் பல வழிகளில் வந்து சேரும். செய்யும் தொழில் எல்லாம் சிறப்படையும். 1 எண் காரர்களைப்போல இவர்களும் புதுமை கண்டறியும் ஆற்றல் வாய்ந்தவர்கள்.ஆனால் இவர்களுக்குதங்களுடைய எண்ணப்படி செய்து முடிப்பதில் அவ்வளவு வேகமோ அல்லது உறுதியோகிடையாது. இவர்களது தன்மையானது உடலை அதிகமாகச் சாந்திராமல், மனதையே சாந்திருக்கும்.

நுரையீரல் நோய், தொண்டையில் ஏற்படும் கோளாறு, இரத்த சோகை, இருதய வலி போன்றவை பிற்காலத்தில் ஏற்படும். இளமைக்காலத்தில் நல்ல உடல் நலம் இருக்கும்.

2-7-11-16-20-25-29ம் தேதிகளும் 1-4-10-13-19-22-28-31ம் தேதிகளும் எந்த ஆண்டு எந்த மாதமானாலும் யோகமான நாட்களாகும்.

வாழ்க்கையில் 2-7-11-16-20-25-29-34-38-43-47-52-56-61-65-70ம் வயதுகளில் எதிர்பாராத சுபநிகழ்ச்சிகள் நடைபெறும்.

2-7-11-16-20-25-29-1-4-10-13-19-28-31ம் தேதிகளில் பிறந்தவர்கள்என்றும் உறுதுணையாகவும்நட்பாகவும் இருப் பார்கள்.

வாழ்க்கைத் துணையும் இந்த எண்ணில் அமையுமானால், இவ்வுலக இல்லற வாழ்க்கை இன்பமானதாக அமையும்.

வர்ணம்:- இலேசான பச்சை வர்ணமே மிக அதிர்ஷ்டமானது. வெளிர் மஞ்சள், வெள்ளையும் நன்மை தரும். வெள்ளையை விட பச்சையே அதிக வெற்றி தரும் ஆகையால் பச்சை நிறத்தில் ஆடைகள் தரிப்பது நல்லது.

இரத்தினம்:- இரத்தினங்களில் முத்து JADE என்று சொல்லப்படுகிற பச்சை நிறக்கல் தரிக்க நன்மை தரும்.(வயிறு சம்பந்தமான சகல நோய்களையும் JADE நீக்கும்).

வைடூரியம் இவர்களுக்கு மிகவும் அதிர்ஷ்டம் அளிக்கும். முத்தே மிகச் சிறந்தது.

**வே.தவராசா**

# கொழும்பு பலாலி விமானச்சேவை வெள்ளி முதல் ஆரம்பம்! ஒருவழிக் கட்டணம் 3500/=, இருவழிக்கட்டணம் 6000/=

(அரியம்)

கொழும்பு இரத்மலானைக்கும் பலாலிக்கும் இடையிலான ஸ்ரீ லங்கா விமானப் படையின் பயணிகள் விமானசேவை எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகின்றது.

இவ்வருடம் மார்ச் மாதம் அனுராதபுரம் தலவா பிரதேசத்தில் படை வீரர்கள் பயணம் செய்த அன்டனோ விமானமொன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

இதனையடுத்து பயணிகள் விமான சேவை இடை நிறுத்தப்பட்டது.

இப் பயணிகள் விமான சேவைக்காக ஸ்ரீ லங்கா விமானப் படையின் HELI TOURS நிறுவனம் உக்கிரேனிலிருந்து இரு விமானங்களை வாடகைக்கு செய்யப்பட்டுள்ளது.

தினசரி இரு சேவைகள் நடைபெறும் என்றும் ஒரு வழிக் கட்டணம் ரூபா 3500 எனவும் இருவழிக்கட்டணம் ரூபா 6000 எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# அமைய ஊழியர்களின் இடைநிறுத்தம் இல்லையாம்

(மட்டக்களப்பு)

வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள திணைக்களங்களிலும் பாடசாலைகளிலும் அமைய அடிப்படையில் பல வருடங்களாக கடமை புரியும் எழுதுவினைஞர்கள் சிற்றூழியர்கள் ஆகியோரின்சேவை இடைநிறுத்தப்படமாட்டாது என வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தன உறுதியளித்துள்ளார்.பிரஸ்தாப உத்தியோகஸ்தர்களின் நிரந்தர நியமனம் விடயமாக எழுதுனர் அதனோடிணைந்த சேவை உத்தியோகஸ்தர் சங்கம் அண்மையில் ஆளுனரைச் சந்தித்த போது மேற்படி சங்கச் செயலாளர் வெ.இராஜசேகரிடம் இதனைத் தெரிவித்தார். அமைய அடிப்படையில் கடமை புரியும் உத்தியோகஸ்தர்களை நிரந்தர நியமனம்செய்வதற்கு ஜனாதிபதியின்அங்கீகாரத்தை கோரியிருப்பதாகவும் வெகு விரைவில் இதற்கான நல்லமுடிவு கிடைக்கும் என தான் எதிர்பார்ப்பதாகவும் அங்கிகாரம் கிடைத்ததும் உடனடியாகமேற்படி உத்தியோகஸ்தர்கள்நிரந்தர நியமனத்துக்குள் உள்ளாக்கப்படுவார்கள் எனவும் ஆளுனர் தெரிவித்துள்ளார்.

# ஆசிரியர் சங்கம் அனுதாப அஞ்சலி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதன்மைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.நிமலன் சௌந்தரநாயகம் அகால மரணம் அடைந்ததையிட்டு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பட்டிருப்புக்கிளை உறுப்பினர் அனைவரும் ஆழ்ந்ததுக்கத்தையும் அனுதாபத்தையும் தெரிவிக்கும் அதே வேளை இப்படியாக துரதிஷ்ட சம்பவங்கள் இனிமேலும் நடைபெறா வண்ணம் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும்கேட்டுக்கொள்கின்றோம். என்று தங்கள் அனுதாபச் செய்தியில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பட்டிருப்புக்கிளை தெரிவித்துள்ளது.

# இடைக்கால ..................

வுடனும் சேர்ந்து நடத்தப்பட்ட விஷயம் என்றும் அவர் சொன்னார்.

கடந்த தேர்தலில் தனது நோக்கத்தை நிறைவேற்ற ஜனாதிபதி குமாரதுங்க ஈ.பி.டி.பி யை ஏற்பாடு செய்த விதத்தை நாங்கள் கண்ணாரக்கண்டோம். எனவே எந்த நிலையிலும் நாங்கள் இதை வடக்குக் கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாக சபையை ஆதரிக்க மாட்டோம் என்றும் ஆனந்த சங்கரி சொன்னார்.

ஆனால் இலங்கை அரசிற் கும் விடுதலைப் புலிகளுக்கும் நடைபெறும் அமைதிப் பேச்சுவார்த் தைகளை தமிழர் விடுதலைக் கூட்டணி முற்று முழுதாக ஆதரிக் கும் என்றும் ஆனந்த சங்கரி கூறினார்.

பேச்சுவார்த்தை மூலம் ஓர் நல்ல முடிவு காணப்பட வேண்டும் என்பதில் நாங்கள் தீவிரமாக இருக்கிறோம். இந்த வகையில் தான் நாங்கள் அரசாங்கத்தையும், விடுத லைப் புலிகளையும் கலந்து பேசி வடக்குக் கிழக்கு நெருக் கடிக்கு ஒரு தகுந்த தீர்வைக் காணுமாறு வற்புறுத்திக் கொண்டி ருக்கிறோம் என்றும் ஆனந்தசங்கரி சொன்னார்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கருத்துத் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசிக்காமல் இடைக்கால நிர்வாக சபை கொண்டு வருவதில் அர்த்தமில்லை என்றார். வடக்குக் கிழக்கின் ஒரே பிரதிநிதி விடுதலைப் புலிகள் தான். போர் முடியும் வரை இப்படியொரு சபையை நிறுவுவதற்கு தமிழர் காங் கிரஸ் ஆதரிக்காது என்றும் கூறினார்.

விடுதலைப் புலிகள் பங்கேற்காத ஒரு சபையை நிறுவுவது சாத்தியமில்லை என்பதை களநிலைமை தெரியாதவர்கள் புரிந்து கொள்வார்கள் என்றும் விநாயகமூர்த்தி சொன்னார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் நிர்வாக சபை அமைப்பது பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையில் சகல அரசியல் கட்சிகளையும் கலந்து பேசிக் கருத்துப் பெற்ற பின் இதைச் செய்ய வேண்டும் என்றார்.



**போலியோ சொட்டுமருந்து வழங்கும் நிகழ்வு அண்மையில் சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் இடம் பெற்ற போது பிடிக்கப்பட்ட படம். படத்தில் பொதுச் சுகாதார உத்தியோகத்தர் முசாதிக், அதிபர் ஐ.எல்.ஏ.மஜீத் காணப்படுகின்றனர்.**

(படம் - முபா)

# நகரசபைத் தலைவரின் கைத்துப்பாக்கியும் இல்லை

(மட்டக்களப்பு)

வல்வெட்டித்துறை நகரசபைத்தலைவர் எம்.கே. சிவாஜிலிங்கத்திற்கு இராணுவத்தினரால் வழங்கப்பட்ட தற்பாதுகாப்பு கைத்துப்பாக்கி நேற்று முன்தினம் மீள பெறப்பட்டுள்ளது.

512வது படைப்பிரிவிற்கு இவர் அழைக்கப்பட்டு அங்கிருந்து பலாலிஇராணுவ தலைமையகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு சுமார் 3 மணி நேரம் விசாரணை செய்யப்பட்டதாகவும் அதன் பின்னர் இவரது தற்பாதுகாப்பு கைதுப்பாக்கி மீள பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக எம்.கே. சிவாஜிலிங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் இச்சம்பவம் குறித்துத் விசனமும் கண்டனமும் தெரிவித்துள்ளார்.

இரு வருடங்களுக்கு முன்பு யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தலைவர்களுக்கு தற்பாதுகாப்பிற்கு கை துப்பாக்கி வழங்கப்பட்ட போதிலும் அதனை நாம் பெறவில்லை. பொலிஸ் பாதுகாப்பையும் நாம் பெறவில்லை.

அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக தமிழ் கட்சி ஒன்றினால் யாழ் குடாநாட்டில் உருவாக்கப்பட்ட ஆயுத அச்சுறுத்தல் காரணமாகவே இந்த தற்பாதுகாப்பு கைத்துப்பாக்கியைப் பெற்றுக்கொண்டோம்.

டெலோ இயக்கத்தின் அரசியல் நிலைப்பாடு, பாராளுமன்ற கூட்டத் தொடர் பகிஸ்கரிப்பு போன்ற காரணங்களினாலும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத் தொடர் அன்று சபைக்குள் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டுமென்றும் வல்வெட்டித்துறை நகரசபை எடுத்த தீர்மானம் ஆகியவற்றிற்கு அரசின் பழிவாங்கும் நடவடிக்கையாகவே இச்சம்பவத்தை தான் கருதுவதாக அந்த செய்திக் குறிப்பில் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

# நிரந்தர கௌரவமான சமாதானமே வழி!

ஸ்ரீலங்காவின் பதினோராவது பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ கொள்கைப் பிரகடனம் என்றும் சந்திரிகா அம்மையார் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ஆறு வருட பூர்த்தி என நும் ஸ்ரீலங்காவின் அரசியல் வானில் "வான வேடிக்கைகள்" அரங்கேறியிருக்கின்றன. ஊடகங்களின் செய்தி வெளியீட்டில் பெருத்த இடத்தை சமீப நாட்களாக இவை ஆக்கிரமித்தும் உள்ளன.

ஈழத்தமிழரின் அரசியல் இராணுவ வரலாற்று இயங்கு சக்தியாக சொல், செயல், சிந்தனை எனும் மூன்றிலும் ஒருமித்து நிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் அவர்களை, "வன்னியின் ஜெனீவா" என மேற்குலக இராஜ தந்திரிகளால் கணிக்கப்படும் மல்லாவியில் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் "எரிக் சொல்ஹெய்ம்" கண்டு கலந்துரையாடியதன் பிரதிபலிப்பான புதிய (பழைய) அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் மீது விழிகளை விரிக்கச் செய்தவர்களுக்கு பெரிதும் விதந்துரைக்கத்தக்கதாகத் தந்திருக்கவில்லை.

"புதிய மொந்தையில் பழைய கள்ளு" என்பதன் நடைமுறை எடுத்துக் காட்டாக விளங்கும் ஸ்ரீலங்காவின் பௌத்த சிங்கள பேரினவாத அரசாங்கத்தின் நிலைப்பாடாக "வார்த்தை ஜாலங்களே" வெளியாகியுள்ளன. விடுதலைப் புலிகளது நிபந்தனைகளை சரிவர அறிந்து கொண்டதன் பின்பே சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான தெளிவான(?) நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்; அதுவரை யுத்தத்தின் மூலமான தீர்வே கொண்டு செல்லப்படும் என்று நீடி முழங்கி இருக்கிறார் அம்மையார்.

ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை தமிழ் பேசும் மக்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. மாறாக பௌத்த பேரினவாதக் கோட்பாடாக பேரினவாத "இஸம்" தொடர்பான நிலைநிறுத்தலுக்கான வாதமாகவே கருதியுள்ளனர் என்பதே நோக்கர்களின் கருத்தாகிறது. மேற்படி உரை தொடர்பாக சில "தமிழ்" அரசியல் வாதிகள் (?) "ஆஹா! ஓகோ! பேஷ்" என்று புகழ்ந்து தள்ளி தமது "இராஜ விசுவாசத்தை" வெளிப்படுத்தவும் தவறவில்லை.

மேற்போந்த ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரையில் "விடுதலைப்புலிகள் நிபந்தனை விதித்திருக்கிறார்கள்; அவை சரிவர அறியப்பட வேண்டும்" என்று முதன்மைப்படுத்தி கூறியிருப்பதானது நாட்டு நடப்புக்கள் தொடர்பான அதீத ஈடுபாட்டையே காட்டியிருப்பதாகவும் பொது ஜன நம்பகத் தன்மையை பரிகசிப்பதாகவும் கூட நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

காரணம் யாதெனில், வன்னியில் தேசியத் தலைவர் அவர்களுடன் கலந்துரையாடி விட்டு ஸ்ரீலங்காவின் தலைப்பட்டினம் திரும்பிய நோர்வேயின் சிறப்புத் தூதுவர் கூட்டிய ஊடகவியலாளர் மாநாட்டிலே "விடுதலைப்புலிகளின் தலைவர் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக எவ்வித நிப்ந்தனையையும் விதிக்கவில்லை." என்று பகிரங்கமாக வெளிப்படுத்தியும் பொறுப்பற்ற விதத்தில் பேரினவாத ஊடகங்கள் செய்திகளை திரிபுபடுத்தி வெளியிடுவது போல நாட்டின் அதிகார பீடம் கருத்துத் தெரிவித்தமையே ஆகும். இப்போது ஈழத்தமிழர்களுக்கு நிரந்தர கௌரவமான சமாதானமே வழியாக வெளிப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி நீண்ட உரையில் கவனிக்கப்பட வேண்டிய இன்னொரு விடயமும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக வெளிப்பட்டு இருந்தது. மூன்றாவது ஈழப் போர் ஆரம்பமாகக் கரணமான பேச்சுவார்த்தை முறிவுக்குக் காரணம் விடுதலைப்புலிகளே என்று தனது வழமையான "அருளுரை"யை எவ்வித "காரணகாரிய" விளக்கங்களுமின்றி செப்பியிருந்தார். ஆனால், இது பெரிதாகப் பலராலும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

கடந்த பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் வாதங்களுக்கு பெரும் ஆவணமாக அமைந்ததும் விடுதலைப்புலிகளின் அரசியல் வாதங்களுக்கு பெரும் ஆவணமாக அமைந்ததும் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களால் எழுதப்பட்டதுமான "துரோகத்தனத்தின் அரசியல்" **(POLITICS OF DUPLICITY)** என்ற வரலாற்று ஆவணத்தில் மிகத் திருத்தமாக மறுத்துரைக்கப்பட முடியாத தக்க சான்றுகளுடன் 1995 சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடையக் காரணம் பொதுஜன முன்னணி அரசாங்கமே என்ற மாபெரும் உண்மையை மறுதலிக்க முடியாத நிலையிலே ஒரு "பூசி மெழுகல்" ஆகவே சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அவர்களின் பாராளுமன்ற கொள்கை விளக்க உரை அமைந்திருந்தது என்பதையும் பேரினவாத அரசியல் செல்நெறிகள் அறிந்தவர்கள் கண்டுணர்ந்திருப்பார்கள்.

இத்தகைய கொள்கை விளக்க உரை மற்றும் நோர்வேயின் சமாதானப் பணி முன்னெடுப்புக்களிலே தேசியத் தலைவரின் நேரடி பங்களிப்பு என்பது ஸ்ரீலங்கா அரசாங்கம் மற்றும் இதர பேரினவாத சக்திகள் மீது விழுந்த மாபெரும் அரசியல் காய் நகர்த்தலின் "ஓயாத அலைகள்" பாய்ச்சலாக அமைந்து விட்டது. இதன் மூலம் சர்வதேச அரங்கில் விடுதலைப்புலிகள் சமாதானத்திற்கெதிரானவர்கள் என்ற உலகளாவிய பரப்புக்கள் ஊடான பொய்ப்பிரசாரம் தூக்கியெறியப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவரது சமாதானத்திற்கான முன்வருதல் ஆற்றலை பேரியல் ரீதியான புலவீனமாக ஸ்ரீலங்கா அரசாங்கம் கருதுமானால் பின்விளைவுகளைப் பட்டுத்தான் ஆக வேண்டி வரும். ஏனெனில், சலுகைகளுக்காகவும் பதவிகளுக்காகவும் விலை போகாத தீர்க்கதரிசன வரலாற்றுத் தலைமைத்துவத்தின் உயரிய ஆனால் ஆர்ப்பாட்டமில்லாத வெளிப்பாடு அது.

"ஒரு காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்து ஒன்றாக இருக்கும் என்று ஒருவர் கனவு காணலாமே ஒழிய அந்த இணைந்த மாகாணத்தின் முக்கிய அரசியல் கட்சியாக எல்.ரி.ரி.ஈ.யும் மாகாண சபையின் முதலமைச்சராக வேலுப்பிள்ளை பிரபாகரனும் இருப்பார் என்று எவரும் கனவு காண முடியாது என்று நான் நினைக்கிறேன்" என்று புதுடில்லி சமூக விஞ்ஞான ஆய்வு நிலையத்தின் இயக்குநராக பணிபுரிந்த "பர்தா எஸ்.கோஷ்" என்பவர் கூறியிருப்பது மேற்படி கருத்தை வலுப்படுத்துகிறதல்லவா?

இவ்வாறான சமாதானப் பேச்சுவார்த்தைகளின் வெளிப்பாடுகள் மத்தியில் ஈழத்தமிழர்கள் தமது "நீண்ட" இலக்கை நோக்கிய தமது பயணத்தை "போராட்ட வடிவங்கள் மாறினாலும்" நிலை தளராது முன்னெடுப்பதுடன் மாத இறுதிப் பகுதியில் வெளியாகும் வரலாற்றுச் செய்தியை சரிவரப் புரிந்து கொண்டு, வடக்கு கிழக்கு தமிழர் தாயக ஆள்புல ஒருமைப்பாட்டைப் பேண விரைந்து செயலாற்றுவதே நிரந்தர கௌரவமான சமாதானத்தைத் தோற்றுவிக்கும்

**கே.ரி.பி.ஷாந்தன்,**
**கிழக்கு பல்கலைக்கழகம்**

## கருத்தரங்கு

### இது உங்கள் பக்கம்

மீண்டும் கருத்தரங்கு இப்பகுதியில் ஆரம்பமாகியிருக்கிறது. தேர்தலுக்குப் பின் மக்கள் பிரதிநிதிகளிடம் எதிர் பார்க்கும் தேவைகள், அரசியல் நிலைமை நோர்வேயின் சமாதான முயற்சிகள் போன்ற பல விஷயங்களில் வாசக நேயர்கள் தங்கள் கருத்துக்களை இப்பகுதியில் வெளியிட வாய்ப்பளித்திருக்கிறோம். இனி இது உங்கள் பக்கம்.

## தந்தை வழியில் மைந்தனும் அமைச்சர்

(நமது நிருபர்)

தந்தை வழியில் தனயனும் பிரதியமைச்சர் நியமனம் பெற்றார். திருகோணமலை மாவட்டத்தில் இருந்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் பட்டியலில்



போட்டியிட்டு, ஆகக்கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற நஜீப் அப்துல் மஜீத் தபால், தொலைத்தொடர்பு பிரதி அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

தாயின் ஆட்சிக் காலத்தில் தந்தையும் மகளின் ஆட்சிக்காலத்தில் மகனும் பிரதி அமைச்சர்களாகியுள்ளனர். நஜீபின் தந்தையான அப்துல் மஜீத் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கத்தில் பிரதி அமைச்சர் பதவி வகித்தார். இப்போது அவரது புதல்வன் நஜீப் சந்திரிகா பண்டாரநாயக்காவின் அரசின் கீழ் பிரதி அமைச்சர் நியமனம் பெற்றுள்ளார்.

சுதந்திரத்தின் பின்னர் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து எவரும் அமைச்சராக நியமிக்கப்படவில்லை. ஆனால் இதுவரை மூவர் பிரதி அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சுதந்திரக் கட்சி அரசில் ஏ.எல்.அப்துல் மஜீத், ஐக்கிய தேசியக் கட்சி அரசில் எம்.ஈ.எச். மஃறூப் பிரதி அமைச்சராகியுள்ளார்.

இதுவரை இம்மாவட்டத்தில் இருந்து பிரதியமைச்சர் நியமனம் பெற்ற மூவரும் கிண்ணியாவைச் சேர்ந்தவர்களாகும்.

## இடைக்கால நிர்வாக சபைக்கு தமிழ்க் கட்சிகள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படுமென்று புதிய பாராளுமன்றத்தின் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து புதிய அரசின் கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்ட ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா தமது உரையில் தெரிவித்திருந்தார்.

இந்த இடைக்கால நிர்வாக சபை அமைக்கும் திட்டத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியும் அகில இலங்கை தமிழர் காங்கிரசும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றன. தமிழீழ விடுதலைக் கழகமும் (ரெலோ) இத் திட்டத்தை ஆதரிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி இந்த இடைக்கால நிர்வாக சபை அமைச்சருக்கும் திட்டத்தை வன்மையாக எதிர்ப்பதுடன் அதன் தலைவர் வி. ஆனந்தசங்கரி மிகக் கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்திருக்கிறார்.

இடைக்கால நிர்வாகச் சபை அமைக்கும் விஷயத்தில் முன்னர் என்ன கொள்கையைக் கொண்டிருந்தோமோ அதே கொள்கையைத்தான் இப்பொழுதும் கொண்டிருக்கிறோம் என கூட்டணியினர் தெரிவித்தனர்.

இடைக்கால நிர்வாக சபை சம்பந்தமாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வி.ஆனந்தசங்கரி கூறியதாவது:-

விடுதலைப் புலிகளின் ஆதரவில்லாமல் வடக்கிலும் கிழக்கிலும் எந்த நிர்வாகமும் சாத்தியமாகாது. இந்த நிலையில் வெறும் கேலிக் கூத்தாகவே இருக்கும். இந்தச் சபை ஈ.பி.டி.பி தேர்தல் முறை கேடுகளிலும், வன்செயல்களிலும் ஈடுபட குற்றச் சாட்டுக்குள்ளாகி இருப்பதால் எக் காரணம் கொண்டும் நாங்கள் இந்த இடைக்கால நிர்வாக சபையை ஆதரிக்க முடியாது.

பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் ஈ.பி.டி..பி க்கும் அதன் தலைவருக்கும் ஜனாதிபதி சான்று வழங்கியபோது தனக்குக் கடும் ஆத்திரமேற்பட்டதாகவும் ஆனந்த சங்கரி கூறினார். இது ஜனாதிபதிக்குத் தேவையற்றது என்றும் அவர் சொன்னார்.

கடந்த தேர்தலில் ஈ.பி.டி.பியின் ஆயுதந் தாங்கியவர்களின் நடவடிக்கைகளால் சுமார் ஐம்பத்தோராயிரம் பேர் வாக்களிக்க முடியாமல் போனார்கள் என்றும் ஆனந்த சங்கரி குற்றம் சாட்டினார். ஊர்க்காவல் துறையில் ஈ.பி.டி.பி தவிர மற்றய 20 கட்சிகளோ 240 வேட்பாளர்களில் வேறு எவரோ பிரச்சாரம் செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை என்றும் ஆனந்தசங்கரி குற்றம் சாட்டினார் இது அரசாங்கத்துடனும். ஜனாதிபதி குமாரத்துங்க

(4ம் பக்கம் பார்க்க)

## இரண்டு கண்ணிலும் இரத்தம்!

ஒட்டுண்ணியாய்
பாலஸ்தீனத்தின் உதிரத்தை
குடித்துக் கொண்டிருக்கும்
ஈஸ்ரேலியனே!

✶

உலகிலேயே இடமில்லாத
உனக்கு ஒதுங்க
இடம் தந்தவனையே சிரம்
வெட்டி சிவப்பு ரத்தம்
பார்க்கிறாயே!

✶

தாயாய் அழைத்துக்கொண்ட
அறபிய தாய் மாரின்
அங்கங்களை துயில்
உரிந்து விளையாடுகிறாயே!

✶

வாசல் திறந்து வரவேற்ற
அந்த அன்பு நெஞ்சங்களை
பிடரி பிடித்து வெளியே
தள்ளுகிறாயே;

✶

கண்ணீரிலும் இரத்தத்தாலும்
அந்த அறபியர்களில்
வரலாறு வரையப்பட்டுக்
கொண்டிருக்கிறது......!!

✶

உலக வல்வரசுகள் அமைதி
காப்பதாய்,
சமரசம் வளர்ப்பதாய்
ஒரு தேசத்தின் சிவப்பு
ஜனநாயகம் படைக்கின்றன.

✶

"என் தங்கையின் பிணம்
நிர்வாணமாய் வான் பார்க்கிறதே"
என்று அழுகிறான்
ஒரு பாலஸ்தீன அண்ணன்

✶

பிணம் தின்னும் பேய்களாய்
இஸ்ரேலியனின் இதயம்
இருண்டு போனது!

பாலஸ்தீன பிணம் தின்ற
களைப்பில் யூத நரிகள்
ஊளை விடுகின்றார்கள்

✶

பாலஸ்தீன தாய்மாரின்
மார்புகள் சுரக்கும் பால்
இஸ்ரேலியன் குடிக்கும்
"விஸ்கி"
ஆகிப் போனது.

✶

ஓ.....!
அந்த பாலஸ்தீனத்தின் மீது
வெட்டப்பட்டு கசியும்
இரத்தத்தின் கோடுகள்
இந்த உலக உருண்டைக்கு
அகலாங்கு நெட்டாங்கு
வரையட்டும்!!

✶

இலங்கையின் இனத்துவேசம்
ஈழத்தில் மனித
குண்டுகளை உருவாக்குகிறது
பாலஸ்தீனத்திலோ
கர்ப்ப பைகளிலேயே மனித
குண்டுகள் உற்பத்தியாகின்றன.

✶

பாலஸ்தீனமே!
ஈழத்தமிழினம்
ஒரு கண்ணால்
தன் உரிமைக்காகவும்
மறு கண்ணால்' - உன்
உணர்வுகளுக்காகவும்
அழுகிறது....ஓ;
எம் இரண்டு கண்ணிலும்
இரத்தம்!

**வெலண்ணா சிவராஜா**

## எங்கள் அதிபர்



எங்கள் அதிபர்
வருகிறார்
எழுந்து வணக்கம்
சொல்லுவோம்
பொங்கும் அவரின்
சிரிப்பிலே
புதிய நாளைத்
தொடங்குவோம்.

❖❖❖❖❖

பிரம்பு கையில்
இல்லையாம்
பேசும் ஏச்சும்
இல்லையாம்
அரும்பும் கனிவு
முகத்திலே
அவர் தான் எங்கள்
அதிபராம்

❖❖❖❖❖

அன்பாய் வாழ்த்துக்
கூறுவார்
அறிவின் வழியும்
காட்டுவார்
என்றும் அன்பாய்
வாழவே.
இனிய விழியால்
வாழ்த்துவார்


## 'ஒவன் கடாகிரி''

அமெரிக்காவில் சிறப்பாகப்பொய் சொல்பவர்களுக்கு வழங்கப்படும் பரிசு "ஒவன் கடாகிரி" ஆகும்.

## இணை மொழிகள்

1. அகடவிகடம்(நகைச்சுவை)
2. அந்திசந்தி(காலை மாலை)
3. அமளிதுமளி(ஆரவாரம்)
4. அரைகுறை(நிறை இன்மை)
5. ஆடையணி(அலங்காரம்)
6. ஆற அமர(மிக அமைதியாக)
7. எதிரும் புதிரும்,கையும் மெய்யும்(நேர்முகமாக)
8. காடும் மேடும், சந்து பொந்து(எங்கும்)
9. சீறிச் சினந்து(வெறுத்து)
10. நரைதிரை(முதுமை)
11. பட்டி தொட்டி(ஊர்கள்)
12. அண்டை அயல்(அருகாமை)
13. உருண்டு திரண்டு(பருத்து)
14. பல்கி பெருகி(பலவாகி)
15. முட்டி மோதி(எதிர்த்து)

**உ.தக்ஷினி**
**ஆண்டு - 5C**
**மட்/சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயம்**



இவ் உருவில் எத்தனை முக்கோணிகள் உண்டு? முயன்று பாருங்கள். விடை அடுத்த இளஞ்சிட்டுக்களில் வெளிவரும்.

**சென்றவார விடை:-**
**8 சதுரங்கள் உண்டு**

# இளஞ்சிட்டுக்கள்





தயாரிப்பு:
க.கிருபாகரன்
ப.ராதிகா

# நளன் - தமயந்தி

## - மாஸ்டர் சிவலிங்கம் -

**2**

" இளவரசி மிகவும் சந்தோஷமான செய்தி ஒன்றை உன்னிடம் சொல்வதற்காகவே விரைந்து வந்தேன். நல்ல உள்ளம் படைத்தவனும் இரக்க குணம் உடையவனும், நிடதநாட்டில் நல்லாட்சி புரிபவனுமான நளமகாராஜன்உன்னை விரும்புகிறான். அவனைப் போன்ற பேரழகன் தேவலோகத்திலும் இருக்க மாட்டான். அவனே உனக்கு ஏற்ற துணைவனாவான்". என்று கூறியது அன்னப்பட்சி.

அன்னத்தின் மூலம் செய்தி அறிந்த தமயந்தி நளன் மீது விருப்பம் கொண்டாள். தனது விருப்பத்தைநளனிடம் தெரிவிக்கும்படி அன்னத்திடம் சொல்லி அனுப்பினாள்.

நளன்மீது காதல் கொண்ட தமயந்தி அவன் நினைவாகவே இருந்தாள். அவளுடையஉடலிலும் செயலிலும்சிலமாற்றங்கள் காணப்பட்டன. பொலிவிழந்தவளாகச் சோர்வுற்றிருந்தாள்.

அவளுடைய நிலையைக் கண்ட தோழிப் பெண்கள் இது பற்றி பீமராஜனிடம் தெரிவித்தனர். அவர்கள் கூறியதைக் கேட்டதும் பீமராஜன் ஆழ்ந்து சிந்தித்தார். தமயந்தி திருமண[illegible]தை அடைந்துள்ளதால் விரைவில் சுயம்வரத் திருமணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார்.

தமயந்தியின் சுயம் வரத்தில் கலந்து கொள்ளும்படி பல அரசர்களுக்கு அழைப்பு விடுத்தார் பீமராஜா. அழைப்புக் கிடைத்ததும்பல பாகங்களிலிருந்தும் அரசர்கள் விதர்ப்ப



தேசத்திற்கு வர ஆரம்பித்தனர்.

தமயந்தியின்சுயம்வரத்தில் கலந்து கொள்வதற்காகவே நளமகாராஜனும் சென்றான். அப்போது!

" நளமகாராஜனே! கொஞ்சம் நில்.....! " என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் நளன். அங்கே...!

தேவேந்திரனும் மற்றும் மூன்றுதேவர்களும் நளமகாராஜனை நோக்கிவந்து கொண்டிருந்தனர். நளன் தேரிலிருந்து இறங்கி தேவேந்திரனை நோக்கிச் சென்றான்.

" நளமகாராஜனே! நான் தேவேந்திரன். இவர்கள் வருணபகவான், அக்கினிபகவான், இயமதர்மராஜன் ஆகியோர். எங்களுக்கு நீ ஒரு உதவி செய்ய வேண்டும். செய்வாயா? " என்று கேட்டான் தேவேந்திரன்.

" தேவேந்திரனே! என்னால் முடிந்தால் நிச்சயம் செய்வேன். உங்களுக்கு என்ன உதவி செய்ய வேண்டும்...? " என்று பணிவோடு கேட்டான் நளன்.

" நளனே! நீ தமயந்தியிடம்எங்கள் தூதுவனாகச் சென்று, தேவர்களாகிய நாங்கள் அவள் மீது விருப்பம் கொண்டு வந்திருப்பது பற்றியும் எங்களில் யாராவது ஒருவருக்கே மாலை சூடித் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றும் அவளிடம் கூறிவிட்டு வா..." என்று கூறினான் தேவேந்திரன்.

" தேவேந்திரனே! தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும். தமயந்தியை நான்



மனதார நேசிக்கிறேன் அப்படியிருக்கும் போது நான் எப்படி அவளிடம் சென்று உங்கள் செய்தியை எடுத்துக் கூறுவது..?" என்று தயக்கத்துடன் கூறினான் நளன்.

" நளனே! என்னால் முடிந்தால் நிச்சயம் செய்வேன் என்று வாக்குறுதி அளித்து விட்டு இப்போது நீ இப்படிப் பேசலாமா...?" என்று ஆத்திரத்துடன் கேட்டான் தேவேந்திரன்.

(தொடரும்....)

## உலக நாடுகளின் சுவைமிகு தகவல்கள்.


◆ பாரிஸ் நகரில் பிஞ்சுக் குழந்தைக்கென்றே நீச்சல் குளங்கள் இருக்கின்றன. பயிற்சியாளர்களும் இருக்கிறார்கள். சுமார் எண்ணூறுக்கும் மேற்பட்ட குழந்தைகள் இங்கே நீச்சல் கற்றுக் கொள்கிறார்கள்.

◆ ஜப்பான் மக்களுக்குப் பிடிக்காத எண் ...3 ஆகும். மூன்று போகச் சேர்ந்து யாரும் புகைப்படம் எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

◆ சீன நாட்டில் செய்திகளைக் கவிதைகளாக்கித் தெருவில் பாடிப் பரப்பினார்கள்.

◆ அமெரிக்க ஜனாதிபதியின் கார் இலக்கம் 100 என்றே இருக்கும்.

## கடற்கரைக் காட்சி



ஏ.ஆர்.பாத்திமா றிகாஸா
தரம்:- 08
கமு/அல்-மிஸ்பாஹ் வித்தியாலயம்

## அறிஞர் சிந்தனைகள்

✻நட்பு உண்டாவதற்கு அன்பு மட்டும் போதாது இலட்சிய ஒற்றுமையும் வேண்டும்.

—கெதே—

✻பெருமை நிரம்பிய மனிதர்களே, மக்கள் சமுதாயத்தின் மைல் கற்கள்.

—மாஜினி—

## தெரிந்து கொள்ளுங்கள்

1. உலகில் மிகப் பெரிய நதி எது?
நைல் நதி

2. உலகில் மிகப் பெரிய பாலைவனம் எது?
சகாராப் பாலைவனம்

3. உலகில் பெரிய கடல் எது?
கஸ்பியன் கடல்

4. உலகில் மிகப்பெரிய மலை எது?
இமய மலை

## மாதாந்த சம்பளம்

**இலங்கையில்....?**

அமைச்சர் - 17,500 ரூபா
பிரதி அமைச்சர் - 16,500 ரூபா
பாராளுமன்ற உறுப்பினர் - 13,250 ரூபா

## இலங்கை - இந்திய ஒப்பந்தம்

ஈழத்தமிழர் பிரச்சினையை தீர்க்கவென 1987 ஜூலை 29ம் திகதி இலங்கை-இந்தியப் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி முதன் முதலாக விஜயம் செய்த நாளும் இதுவே.

## பூகோளக் கிராமம

" பூகோளக் கிராமம " என்ற சொற்றொடரின் எண்ணக் கருவானது உலகிலுள்ள சகல நாடுகளும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது. என்றும். நவீன செய்தி,தொழில், பிரயாண வசதிகள்,அகில உலகத்தையும் மிகநெருக்கமாகக் கொண்டுள்ளது என்பதாகும்.

## வாரம் ஒரு நாடு

### துருக்கி

✦ குடியரசு நாடு

✦ **தலைநகர் :-** அங்காரா

✦ **பரப்பு :-** 7,79,000 சதுர கிலோ மீற்றர்

✦ **மக்கள் தொகை :-** 61.1 மில்லியன்

✦ **எழுத்தறிவு :-** 62%

✦ **மொழி :-** துருக்கி, குர்திஷ்

✦ **மதம் :-** இஸ்லாம்

✦ **நாணயம் :-** துருக்கிய லிரா

✦ **விளைபொருட்கள் :-** புகையிலை, கோதுமை, பருத்தி, ஆலிவ் ஆடுகளுக்கு பேர் போன இடம்.

✦ **கனிய வளம் :-** இரும்புத்தாது, செம்பு, குரோமியம், அலுமினியத்தாது,நிலக்கரி, பெற்றோலியம்.

✦ **தொழில் :-** இயந்திரங்கள், பெற்றோலியம், உலோக உற்பத்தி,உணவுப் பதனம்.




# விக்டோரியாக் கழகம் சம்பியனானது!

(கல்முனை நிருபர்)

அல்றூபி ரவல்ஸ் பிரைவேட் லிமிட்டட் ஆதரவில் கல்முனை டொம்ரேங்க விளை யாட்டுக் கழகம் நடாத்திய " றூபி கிண்ணத்திற்கான கடின பந்து கிறிக்கட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி சென்ற சனிக்கிழமை கல்முனை சந்தாங் கேணி மைதானத்தில் நடை பெற்றது.

இப்போட்டியில் கல் முனை விக்டோரியா விளையாட்டுக் கழகமும், சாய்ந்த மருது விரேவ் லீட விளையாட்டுக் கழகமும் கலந்து கொண்டன.

30 ஓவர்களைக் கொண்ட இப்போட்டிக்கு எஸ்.எல். எ.்.யா அரபாத், எ.சி.எஸ்.றகுமான் ஆகியோர் கடமையாற்றினர்.

சாய்ந்த மருது விரேவ் லீடஸ் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 27.3 ஓவர்களில் 97 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

விக்டோரியஸ் விளை யாட்டுக் கழகத்தினர் 25.2 பந்து ஓவர்களில் 6 விக்கட் இழப்பிற்கு 101 ஓட்டங்களைப் பெற்று றூபிக் கிண்ணத்தைப்பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## இந்தியா பங்களாதேஷ் அணிகள் மோதிக்கொள்ளும் டெஸ்ட் தொடர்

(நிருபர் பிரகாஸ்)

பங்களாதேஷில் பக்க பந்து விளையாட்டரங்கில் இந்திய அணியும், பங்களாதேஷ் அணியும் நேற்று மோதிக்கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி. 239 ஓட்டங் களுக்கு 6 விக்கட்டுகளை இழந்தது ஆட்டம் தொடர்கிறது.

இப்போட்டி பற்றி தெரியவருவது யாதெனில் பெரும்பாலும் வெற்றி இந்திய அணியின் பக்கமே உள்ளதாகவும் சிலவேளைகள் பங்களாதேஷ்அணி இந்திய அணியை தோற்கடிக்கும் வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப்போட்டியிலும் சூதாட் டம் தலை தூக்கலாம் என்பதற்காக இந்திய விஷேட புலனாய்வுப் பிரிவினர் கொண்ட குழு அங்கு அனுப்பப்பட்டுள்ள தாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் இடம் பெற்ற சாரணிய ஆசிரியர்களுக்கான கூட்டத்தில் உதவி மாவட்ட சாரணிய ஆணையாளரும் , விரிவுரையாளருமான எம்.ஐ.எம். முஸ்தபா தலைமை வகித்து உரையாற்றுவதையும், சாரணியத் தலைவர் எஸ்.கோகிலராஜா ஆகியோர் இருப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்-முபா)

# கம்பளை சாகிறா வித்தியாலயம் வெற்றி!

(திருமலை நிருபர்)

பாடசாலைகள் உதைபந் தாட்ட சங்கம் நடாத்தும் " மைலோ கிண்ண " போட்டிகள் தற்போது தேசிய ரீதியில் நடை பெற்று வருகின்றன. 12 வயதுக்கு உட்பட்ட பிரிவில் கம்பளை சாகிரா வித்தியாலயம் சம்பியனாகியது. இறுதிப் போட்டியில் எதிர்த்து விளையாடிய திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியை 5:0 என்ற கோல் கணக்கில் இலகுவான வெற்றியை பெற்றுக் கொண்டது.

2ம் இடத்தினை பெற்றுக் கொண்ட புனித சூசையப்பர் கல்லூரி அணியினருக்கு கடந்த வாரம் (6-11-2000) திருமலையில் அக்கல்லூரியினரால் வரவேற்பு ஒன்று அளிக்கப்பட்டது.



கடந்த 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் பங்குபற்றிய மாணவிகளுள், மன்னம்பிட்டி தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற மாணவி பற்குணராசா குமுதினி என்ற மாணவி சித்தி பெற்றுள்ளார். இவர் பெற்ற மொத்தப் புள்ளிகள்133 பரீட்சைக்கு தோற்றிய 28 மாணவர்களுள் இம் மாணவி மாத்திரமே சித்தி பெற்றுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



இவ்வாண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மட்;/நொத்தாரிஸ் மூத்த தம்பி வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் ப.பிரசன்னா143 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் ஆரையம்பதி கிராமக் கோட்டு வீதியைச் சேர்ந்த சுகிர்தமலர் உருத்திரமூர்த்தி தம்பதிகளின் புதல்வர் ஆவர்.



இவ்வாண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மட்/நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி அசோகராசா ஜசானி174 புள்ளிகளைப் பெற்று மண்முனைக் கல்விக் கோட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். இவர் ஆரையம்பதிக் கிராமக் கோட்டு வீதியைச் சேர்ந்த அசோகராசா கௌரியின் புதல்வியாவார்.

**தகவல்:- வி.பத்மஸ்ரீ**

# மார்ட்டின் குரோ மாட்டினார்.

(நிருபர் பிரகாஸ்)

நியுசிலாந்தின் முன்னாள் ஆட்டக்காரர் மார்ட்டின் இந்திய C.B.I புலனாய்வுப் பிரிவினரிடம் மாட்டிக் கொண்டார்.

இந்தியாவின் முக்கிய சூதாட்டக்காரர்கள் 9 பேர் மாட்டிக் கொண்டதை தொடர்ந்தே இவ்வீரர் மாட்டினார்.

சூதாட்டமே இல்லாத அணியான நியுசிலாந்து தற்போது மாட்டிக்கொண்டது. நியுசிலாந்தின் கிரிக்கட் ரசிகர்களுக்கே பெரும் அதிர்ச்சியை விளைவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனை அடுத்து இன்னும் எத்தனை எத்தனை வீரர்கள் அணியிலிருந்து மாட்டுப்படப் போகிறார்கள் என்பது தான் கேள்வியாக உள்ளது.

இது பற்றி நியுசிலாந்து கிரிக்கட் கட்டுப்பாட்டு சபை தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாக விஷேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# வாசகர் நெஞ்சம்

## ஆரையம்பதி மாவட்ட வைத்திய சாலையின் அவல நிலை

ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையில் தாதிமார்கள் போதாக்குறையினால் சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் பெருத்த ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல நேரிடுகிறது.

முன்பெல்லாம் போதியளவு தாதிகள் இங்கே கடமையில் ஈடுபட்டிருந்தனர். தற்பொழுது அந்த நிலை இல்லை.

மகப் பேற்றுக்காக வருபவர்களும் மேற்கூறப்பட்ட காரணத்தால் மிகுந்த சிரமங்களை அனுபவிக்க நேரிடுகிறது.

ஆகவே இந்த வைத்தியசாலைய்ய நம்பிவரும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல இடமளிக்காமல் இந்த வைத்திய சாலையில் நிலவும் குறைபாடுகளை நிவிர்த்தி செய்ய இதற்கான உயர் அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*கி.கிருபா*
*ஆரையம்பதி*

## " கித்துள் பாடசாலையும் ஆசிரியர்களின் திடீர் இடமாற்றமும் "

கித்துள் பாடசாலையில் அதிபராய் இருந்தவரை மாற்றம் செய்துவிட்டு, சமுர்த்தியில் இருந்தவரை அதிபராகவும், திறமையற்ற இன்னுமொருவரை உப அதிபராகவும் நியமித்திருக்கிறார்கள்.

இப்பாடசாலையில் O/L வகுப்புவரை மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். திடீர் ஆசிரியர் மாற்றத்தில் மாணவர்கள் கலங்கிப் போயுள்ளார்கள்.

மேற்படி புதிதாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களை இட மாற்றம் செய்யும் படி மாணவர்கள் பகிஷ்கரிப்பு செய்தும் எதுவித பலனும் ஏற்படவில்லை. இதைப் பற்றி உரிய கல்வி அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன.

*எஸ்.துஷ்யந்தன்*
*கித்துள்*

# இங்கிலாந்து மண்ணில் வெற்றி வாகை சூடிய பாகிஸ்தான் அணி

(நிருபர் பிரகாஸ்)

பாகிஸ்தான் இங்கிலாந்து அணிகளுக்கு இடையே நடை பெற்ற கடைசி ஒருநாள் போட்டி களைத் தொடர்ந்து அங்கு இடம் பெற்ற வன்முறை காரணமாக பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்தப் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றதன் மூலம் இத் தொடரைத் தனதாக்கிக் கொண்டது. முதல் இரண்டு போட்டிகளில் இங்கிலாந்து அணி விளையாடியதை விட மிக மோசமான முறையில் இந்தப் போட்டிகளில் விளையாடித் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

**ஸ்கோர் வீபரம்:**

இங்கிலாந்து அணி 158 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக் களையும் இழந்து ஹஸ்குசின் 36, அலஸ்ரூவிட் 18, குனஷென் 1, இஹ் 3, இக்ர்ஷோக் 39, பிறிட்டோப் 10, வைறட் 0, ஈலம் 23, ஜயில் 13, டப் 0, ஹறிக் ஆட்டம் இழக்காமல் 3. பந்துவீச்சைப் பார்ப்போமானால்:-

வஷீம் அக்ரம் 21 ஓட்டங்களுக்கு 1 விக்கட், ரசாக்40 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்கள், நக்முட் ஒரு ஓவர் பந்து வீசினார், முஸ்ரக்அஹமட் 42 ஓட்டங்க ளுக்கு விக்கட் எதுவும் இல்லை, சக்லீன் முஸ்ரக் 20 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுக்கள் .சகித் அ.்.ப்ரடி 21 ஓட்டங்கள் 1 விக்கட்டையும் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய பாகிஸ்தான் அணி சார்பில் இம்ரான் நசீர்-0, சகித் அ.்.பரிடி - 9, சலிம் அலாகி-23, இன்சும் முல்ஹாக் ஆட்டம் இழக்காமல் - 60 , றுசுப் யோஷான-31, அப்துல் றஷாக் ஆட்டம் இழக்காமல் 17 ஓட்டங்கள் உதிரிகள் 214 விக்கட் இழப்பிற்கு 161 ஓட்டங்களைப் பெற்று பாகிஸ்தான் வெற்றி ஈட்டியது.

இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி சார்பாக ஹரிக46 ஓட்டங்களுக்கு 2 விக் கட்டுக்கள்வைறட்31 ஓட்டங்களுக்கு 1 விக்கட், ஜயத்36 ஓட்டங்களுக்கு 1 விக்கட்டையும் கைப்பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. இத் தொடரில் பாகிஸ்தான் 2:3 என்ற வெற்றி கொண்டது.

இதனைத் தொர்டர்ந்து இடம் பெற்ற சின்னச் சின்ன மோதல் சம்பவங்களில் 35 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தார்கள். அதே வேளையில் மொத்தமாக 10000 பேர் அந்தப் போட்டியை கண்டு களித்தாலும் கூட இன்னும் 7000 பேர் அந்தப் போட்டியைக் கண்டுகளிக்க முயற்சித்தபோதே ஒரு சிறிய குறுகிய வாசல் வழியாக செல்ல முற்பட்ட போதே இந்தநெருக்கடியில் பலர்காய முற்றதாக தெரிவிக் கப்படுகிறது. இது மட்டுமல்லாமல் மக்களின் மோதல்களைஅல்லது நெருக் கடிகளை சமாளிக்க பொலிசார் கண்ணீர்ப் புகைக்குண்டு பாவித்த தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அறைகள் வாடகைக்கு**

**வேலை செய்யும் பெண்களுக்கு சின்ன உப்போடையில் சகல வசதிகளுடன் அறைகள் வாடகைக்கு உண்டு.**

**தொடர்புகளுக்கு:-**

**தொலைபேசி இல :**

**065 — 24674**

# வன்னி செல்ல நோர்வே தூதரகம் உதவியை நாடும் காணாமல் போன படையினரின் பெற்றோர்.

(கொழும்பு)

**போர்க்காலத்தில் கடமையிலிருந்த போது காணாமல்போனவர்கள் என்று கருதப்படும் படையினரின் பெற்றோர் சங்கம் வன்னிக்குச் சென்று தங்கள் பிள்ளைகளின் நிலை என்ன என்பதை அறிந்து கொள்வதற்கு நோர்வே தூதரின் உதவியை நாடுவதற்கு முன்வந்துள்ளது.**

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு உதவ முன்வந்துள்ள நோர்வேயின் முயற்சிக்கு அங்கீகாரமும் நன்றியும் தெரிவிக்கும் இரண்டு பக்க மகஜர் ஒன்றை இம்மாதம் 21 ம் திகதி கொழும்பில் மகாவலி நிலையத்திலிருந்து நோர்வே தூதரகம் வரை ஊர்வலமாக சென்று கையளிக்க சங்கம் முடிவு செய்திருக்கிறது.

இதேசமயம் வன்னிக்கு தாங்கள் நேரில் சென்று தங்கள் பிள்ளைகளைப் பற்றி அறிந்து தெரிந்து கொள்வதற்கு உதவி செய்யுமாறு நோர்வே தூதரகத்திடமும் ஒரு மகஜரை கையளிக்கவும் இச்சங்கம் தீர்மானித்திருக்கிறது.

இச்சங்கம் கொழும்பில் நடத்தவிருக்கும் அமைதியான யாத்திரையை நோர்வேயின் சமாதான முயற்சியை வரவேற்பதும் வன்னிக்கு தங்கள் பிள்ளைகளை நேரில் சென்று அறிந்து கொள்வதற்கும் அரசின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கும் உதவி செய்யுமாறு இச்சங்கத் தலைவர் ஈ.பி.நாணயக்கார தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளிடம் 3000 இலங்கை இராணுவத்தினர் போர்க் கைதிகளாக இருக்கிறார்களென்று நாணயக்கார நம்புகிறார். அங்கிருந்து விடுதலை பெற்றவர்கள் மூலமும் தமக்கு அங்கிருந்து கிடைத்த தகவல்கள் மூலமும் அப்பகுதி மக்களிடமிருந்து பெற்ற தகவல்களிலிருந்தும் மூவாயிரம் பேர் அங்கிருப்பதாக நாணயக்கார சொல்கிறார்.

வன்னிக்கு தங்கள் பிள்ளைகளைச் சென்று பார்ப்பதற்கு பாப்பரசரின் ஆதரவு கோரி ஒரு மகஜரை சமீபத்தில் ரோமில் நடந்து முடிந்த கத்தோலிக்க பாராளுமன்றத்தவரின் மகாநாட்டுக்குச் சென்ற டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா மூலம் இந்த சங்கம் அனுப்பிவைத்திருந்தது.

## தடுப்புக்காவலில் 2 1/2 வருடம் இருந்த இளைஞர் விடுதலை

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் இரண்டரை வருடகாலம் விளக்கமறியலில் இருந்த பின்னர் கடந்த வியாழக்கிழமை கிழக்கு மாகாண மேல்நீதிமன்ற நீதிபதியினால் விடுதலை செய்யப்பட்டார். குற்றஞ்சாட்டப்பட்ட எதிரியான முறக்கொட்டாஞ்சேனை-சந்திவெளியைச் சேர்ந்த இராசு என்றழைக்கப்படும் சிதம்பரப்பிள்ளை இராஜேந்திரன் கைது செய்யப்பட்ட பின்னர் பொலிஸாருக்கு அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்கமுடியாதென மேல்நீதிமன்ற நீதிபதி திரு. எஸ்.என். இராமச்சந்திரன் நிராகரித்ததுடன் எதிரியை உடனடியாக விடுதலை செய்யும்படியும் உத்தரவிட்டார்.

எதிரி அளித்ததாகக் கூறி அரச தரப்பினர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியின் கையெழுத்தோ அல்லது எதிரியின் கைவிரல் அடையாளமோ காணப்படவில்லை என்று எதிரி தரப்பு சட்டத்தரணி அப்துல் சத்தார் நீதிமன்றத்திற்கு சுட்டிக்காட்டியதை அடுத்து நீதிபதி இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரிப்பதாக அறிவித்தார்

அதனை அடுத்து அந்த எதிரி மீது சட்டமா அதிபர் தொடர்ந்திருந்த இரண்டாவது வழக்கை அரச சட்டத்தரணி வாபஸ் வாங்கினார்.

எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தைத் தவிர அவருக்கு எதிராக வேறு எந்தச் சாட்சியத்தையும் சமர்ப்பிக்கக்கூடிய நிலையில் தாம் இல்லை என்று அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இவ்விரு வழக்குகளிலும் சட்டமா அதிபர் எதிரி மீது விடுதலைப் புலிகளிடம் ஆயுதப்பயிற்சி பெற்றது மற்றும் வெடிப்பொருள்களைப் பயன்படுத்தி படையினருக்கு மரணத்தை ஏற்படுத்த முயற்சித்தது ஆகிய குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருந்தார்.

எதிரி இவ்வழக்குகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட நாட்தொடக்கம் இரண்டரை வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு தினமும் எதிரி விளக்கமறியலில் இருந்தே நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தார்.

## படையினர்....

விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். 46 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். கைதானோரில் ஆறு பெண்கள் அடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது இவர்களது விடுதலை குறித்து அலிஸாஹிர் மௌலானா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகேயுடன் தொடர்பு கொண்டிருந்தனார்.

## விடுதலைப் புலிகளுடன் ............

விடுதலைப் புலிகளும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் நேரடியாக விடுதலைப்புலிகளுடன் பேசவேண்டியது அவசியமென்றும் செல்வம் சொன்னார்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (சுரேஸ் பிரிவு) தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில் இனப்பிரச்சினைத்தீர்வுக்குப் பேச்சு நடத்த விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உடனடியாகவே விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி நல்லதொரு முடிவு காணப்பட வேண்டும் இதை நழுவ விட்டுவிடக்கூடாது என்று அவர் தெரிவித்தார்.

கூட்டணியின் ஆனந்த சங்கரி

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் வி. ஆனந்தசங்கரி கருத்துத்தெரிவிக்கையில் ரணில் விக்கிரமசிங்காவின் யோசனை திருப்திகரமான தல்லதென்றும் அரசத்தலைவரும் எதிர்க் கட்சித்தலைவரும் பல தடவைகள் பேசிவிட்டனர். ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேசுவதற்கு என்ன இருக்கிறது. இந்த கட்சிகளில் சிலர் அவசரகால சட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் இவர்களுடைய கருத்தைக் கேட்பதில் என்ன பயன் கிடைக்கப்போகிறது என்றும் ஆனந்த சங்கரி கேட்டார்.

ஏற்கனவே தமிழ் கட்சிகளுடன் பேசி முடிந்த நிலையில் விட்ட இடத்தில் இருந்து தொடர்வது தான் அவசியமானது புதிதாக ஆறு மாதத்தை வீணடிக்க நான் விரும்பவில்லை. எனவே விடுதலைப் புலிகளுடன் உடனடியாகவே பேச்சை ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகும் என்றார்.

### தமிழ்காங்கிரஸ் தலைவர்

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமரகுருபரன் கருத்துத் தெரிவிக்கையில் ரணிலின் அபிப்பிராயம் அர்த்தமற்றது நீண்ட காலமாக நீடிக்கும் இனப்பிரச்சினை பற்றி பேசுவதற்கு புலிகளுக்கு மட்டுமே உரிமை இருக்கிறது அவர்களுடன் தான் பேச்சு நடத்த வேண்டும். பிரச்சனைக்கான தீர்வை அவர்களுடன் பேசியே காண வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## எம்பிக்களின் பென்சனை நீக்க ஜே.வி.பி. உறுதி.

(கொழும்பு)

பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவதை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று ஜே.வி.பி.விரைவில் தனிநபர் பிரேரணையை கொண்டு வர இருப்பதாக ஜே.வி.பியின் பாராளுமன்றத் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பிரேரணை தாங்கள் கொண்டு வர இருக்கும் மக்கள் நட்புறவு பிரேரணைத் தொடர்களின் ஒன்றுதான் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எம்.பி.களுக்கு ஓய்வூதியம் ஆறு வருடங்களின் பின் வழங்குவதில் எந்தவித நியாயமுமில்லை என்றும் இந்தப் பணத்தை நாட்டின் அபிவிருத்திக்கு செலவிடலாம் என்றும் வீரவன்ச தெரிவித்தார். எம்.பி.க்களுக்கான ஓய்வூதிய முறையை ஒழித்துக் கட்டுவதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம் என்று அவர் தெரிவித்தார்.

தீர்வையில்லாத முறையில் எம்.பி.களுக்கு ஆடம்பர மோட்டார் வாகனங்கள் இறக்குமதி செய்வதை ஒழித்துக் கட்டுவ்தற்கு ஜே.வி.பி. தீர்மானமாக இருக்கின்றதாம்.

எம்.பி.களின் ஓய்வூதியத் திட்டத்தை ஒழிப்பதற்கு ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பரத லக்ஸ்மன் பிரேமச்சந்திராவும் ஐக்கிய தேசியக் கட்சியின் கருணாநாயகாவும் தனியாக பிரேரணைகளைக் கொண்டு வருவதற்கு முனைந்துள்ளனர்.

## பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் ஒருவர் காயம்

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தின் வாசலில் அமைந்துள்ள காவலரண் மீது புலிகள் நேற்று முன் தினம் சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் நடத்திய ஆர்.பி.ஜி தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

புலிகளின் தாக்குதலை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட பதில் தாக்குதலில் பின்னர் புலிகள் பின் வாங்கிச் சென்றதாக அவர்கள் கூறினர்.

புலிகளின் தாக்குதலில் சிவில் பொலிஸ் கான்ஸ்டபிள் எம். ஆர்.ரணசிங்க (27136) காயமடைந்து ஏறாவூர் மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## அரசு - புலிகள் பேச்சுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்பு

(பாரிஸ்)

இலங்கை இனப்பிரச்சினைக்கு நீடித்து நிற்கக்கூடிய நிரந்தர சமாதானம் ஏற்பட இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் பேச்சுக்களை நடாத்த முன் வரவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது.

நோர்வே அரசுப்பிரதிநிதியும் விடுதலைப்புலிகளும் தலைவருக்குமிடையில் நடைபெற்ற இந்தப் பை இந்த ஒன்றியம் வரவேற்று நேற்று அறிக்கை வெளியிட்டது.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இலங்கை மக்களுக்கு சொல்லொணாத் துயரங்களை ஏற்படுத்தி வரும் இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை ஒன்றியம் ஊக்குவிப்பதாக ஒன்றியத்தின் அறிக்கை கூறுகிறது. இருதரப்பிற்குமிடையில் நடைபெறும் பேச்சுக்களாகிறது சிறுபான்மை தத்தம் மக்களின் மதம் மற்றும் கலாச்சாரம் பாரம்பரியங்களுக்கு மதிப்பளிப்பதாகவும் அவர்களது அபிலாசைகளை பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டியதுடன் இலங்கையின் ஐக்கியம் மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டினை உதாசீனம் செய்யக்கூடாதெனவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை வலியுறுத்துகிறது.

## படைக்குத் தேவை 10,000 நேரில் வந்தது 2000!

(கொழும்பு)

இலங்கை இராணுவத்துக்கு பத்தாயிரம் பேர் உடன் தேவையென்றும் இளைஞர்கள் இராணுவத்தில் சேர்வதற்கு ஊக்கமளிக்க வேண்டுமென்றும் பத்தாயிரம் பேர் இராணுவத்தில் சேர்ந்தால் புலிகளை வெற்றி கொள்ளலாமென்றும் இராணுவத் தளபதி லெப்ஜெனரல் பலகல்ல விடுத்த வேண்டுதலுக்கு மிகக் குறைந்த ஆதரவே கிடைத்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் 25ம் திகதி இராணுவத்துக்கு ஆள் திரட்டும் பணியை ஆரம்பித்து நாடு முழுவதும் மாவட்ட செயலகம் உட்பட இராணுவத்துக்கு ஆள் திரட்டுவதற்கென ஐநூறுக்கு மேற்பட்ட நிலையங்கள் அமைக்கப்பட்டன.

இம்மாதம் 15ம் தேதியுடன் ஆள்திரட்டும் கால எல்லை முடிவடைய வேண்டும். ஆனால் இக்காலக்கெடு இம்மாதம் 30 ஆந்திகதி வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

கடந்தவார இறுதிவரை இரண்டாயிரத்துக்கும் சற்றுக் கூடுதலானோரே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். இவர்களில் அநுராதபுரம் கம்பகாவிலிருந்து வந்தவர்களே அதிகம்.

இதர மாவட்டங்களிலிருந்தும் இளைஞர்கள் இவ்விதம் வந்தால் குறியீட்டை எட்டிவிடலாமென்று ஆட்திரட்டும் அதிகாரி தெரிவித்தார்.

## துண்டுப்........

செய்திருப்பதாகவும் இது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்பவர்களுக்கும் இதை ஆதரிப்பவர்களுக்கும் எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எது நடந்தாலும் பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்லவேண்டும் என்றும் எத்தனை பிள்ளைகள் வந்தாலும் பாடசாலைகள் நடைபெறவேண்டும் என்றும் இணைப்பதிகாரி ஏற்கனவே கல்வி அதிபர்களுக்கு கூறியிருக்கிறார். இந்தத் துண்டுப்பிரசுரங்களாலும் இணைப்பதிகாரியின் எச்சரிக்கையினாலும் மட்டக்களப்பு மக்கள் குழப்பமடைகின்றார்கள்.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிக்கேஷன் நிறுவனத்தினரால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.